விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 220 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 11 வியாழக்கிழமை (27.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# தேர்தலை நடத்தி; ஜனாதிபதியாகி தமிழர் பிரச்சினையை தீர்க்குக



- சர்வகட்சி கூட்டத்தில் சிங்கள பேரினவாதிகள்.
- தோல்வியில் முடிந்த ஜனாதிபதியின் முயற்சி.
- தீர்க்கமான முடிவின்றி கூட்டம் நிறைவு.

(கொழும்பு)

**ஜனாதிபதி தேர்தலை நடத்தி மக்களின் வாக்குகளின் ஊடாக ஜனாதிபதியாகி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறு சர்வகட்சி கூட்டத்தில் சிங்களப் பேரின வாத கட்சிகள் தெரிவித்துள்ளன.**

ஜனாதிபதி ரணில் தலைமையில் நேற்று மாலை சர்வ கட்சிக் கூட்டம் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதே சிங்களப்பேரினவாதகட்சிகள்மேற்கண்டவாறு தெரிவித்தன.

இந்தச் சந்திப்பின்போது, சரத் வீரசேகர, அத்துரலிய ரத்ன தேரர், உதய கம்மன்பில, கெலிந்து குமாரதுங்க உள்ளிட்டவர்கள் நீண்ட நேரமாக 13ஆவது திருத்தத்தை எதிர்த்து கருத்து வெளியிட்டனர்.

13வது திருத்தத்தை அமுல்படுத்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு அங்கீகாரம் கிடையாது எனவும், அவர் மக்களாணையைப்பெற்ற பின்னரே 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டுமென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

"உங்களுக்கு ஏன் இந்த தேவையற்ற 15

## என்ன தேவை என்பதை தெளிவாக சொல்லுங்கள்

### தமிழரசுக் கட்சி மீது ரணில் காட்டம்

(கொழும்பு)

உங்களுக்கு என்ன தேவை என்பதை முதலில் தெளிவாக சொல்லுங்கள் என தமிழரசுக் கட்சியினரைப் பார்த்து ரணில் காட்டமாக தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் தலைமையில் நேற்று சர்வகட்சிக் கூட்டம் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் 13 ஆவது திருத்தம் தொடர்பில் விவாதம் 15

## பொலிஸ் அதிகாரம் தொடர்பில் கலந்துரையாடியே தீர்மானிக்கலாம்



### சர்வகட்சி மாநாட்டில் ஜனாதிபதி

(கொழும்பு)

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் மாத்திரம் கலந்துரையாடுவது போதுமானதல்ல எனவும் அது முழு நாட்டிலும் தாக்கம் செலுத்தும் விடயம் என்பதால் அனைத்து தரப்பின 16

## சர்வகட்சி மாநாடு ஜனாதிபதியின் வழமையான அரசியல் செயற்பாடே



### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதியினால் அழைப்பு விடுக்கப்பட்ட சர்வ கட்சி மாநாடு ஜனாதிபதியின் வழமையான அரசியல் செயற்பாட்டின் ஒரு அங்கமேயன்றி வேறில்லை என்பது மிகத் தெளிவாகும் என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சர்வகட்சி மாநாடு 15

## அரசு தமிழ் மக்களை தொடர்ந்து ஏமாற்ற முடியாது

### சர்வகட்சி மாநாட்டில் இரா.சம்பந்தன்

(கொழும்பு)

அரசு தமிழ் மக்களை தொடர்ந்து ஏமாற்ற முடியாது என இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் தலைமையில் நேற்று நடைபெற்ற சர்வகட்சி கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் இழுத்தடிப்பை செய் 15

### மட்டுவில் வடக்கில்

## மூதாட்டியின் சடலம் மீட்பு

(சாவகச்சேரி)

மட்டுவில் வடக்கு பகுதியில் வீட்டில் தனிமையில் வசித்து வந்த மூதாட்டி உருக்குலைந்த நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் 82 வயது 15

### சர்வகட்சி மாநாடு தோல்வி

## ஜனாதிபதியின் நிலைப்பாடு புரியவில்லை - சுமந்திரன்

(கொழும்பு)

ஜனாதிபதியுடனான சர்வ கட்சி மாநாடு குறித்து சந்தேகத்துடனேயே வந்தோம், அதேபோன்று நிரூபிக்கப் பட்டுவிட்டது என்று பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் பின்னர் செய்தி 16

### வவுனியாவில் எரியூட்டப்பட்டு

## மரணமான பெண்ணின் கணவனும் உயிரிழப்பு



(வவுனியா)

வவுனியா தோணிக்கல் சம்பவத்தில் உயிரிழந்த பெண்ணின் கணவரான சுகந்தனும் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

வவுனியா தோணிக்கல் பகுதியில் வீடொன்றுக்குள் நுழைந்த 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் நாளை இலங்கை விஜயம்



ஜப்பானின் வெளிவிவகார அமைச்சர் Yoshimasa Hayashi நாளை 28 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடன் ஜப்பானின் வெளிவிவகார அமைச்சர் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அவர் மரியாதை நிமித்தம் ஜனாதிபதி மற்றும் பிரதமரையும் சந்திக்கவுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜப்பான் வெளிவிவகார அமைச்சருடன் சிரேஷ்ட வெளியுறவுக் கொள்கை ஒருங்கிணைப்பாளர், தென்கிழக்கு மற்றும் தென்மேற்கு ஆசிய விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம் அரிமா யுடகா, சர்வதேச ஒத்துழைப்பிற்கான பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட 22 உறுப்பினர்களைக் கொண்ட குழுவினரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இலங்கையில் உள்ள ஜப்பானின் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவித்தளங்களில் ஒன்றையும் பிரதிநிதிகள் குழுவினர் பார்வையிடவுள்ளனர். (ம-7)

# 13 ஐ நடைமுறைப்படுத்துவதில் என்ன பிரச்சினை? கூறுங்கள் பேசுவோம்

## சர்வகட்சி கூட்டத்தில் ரணிலிடம் மைத்திரி கேள்வி

(கொழும்பு)

40 வருட காலமாக அரசியல் அமைப்பில் ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதில் நடைமுறை சிக்கல் என்ன இருக்கிறது என்பதை தெளிவாக கூறினால் அது பற்றி பேசுவோம் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனா கூறியதாக சுதந்திர கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

நேற்று புதன்கிழமை ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொண்ட பின் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செய்தி குறிப்பிலே அங்கஜன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற சர்வ கட்சி மாநாட்டில் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனாவும் நானும் கலந்து கொண்டோம்.

குறித்த மாநாட்டில் பல்வேறு விடயங்களைப் பற்றி ஆராய்ந்த நிலையில் 13 வது திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பில் விரிவாக பேசப்பட்டது.

பொலிஸ் அதிகாரத்தை தவிர ஏனைய அதிகாரங்களை வழங்க முடியும் என ஜனாதிபதி தெரிவித்த நிலையில் பொலிஸ் அதிகாரம் வழங்குவது தொடர்பில் பாராளுமன்றத்தில் முடிவெடுப்பதாக தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 13ஆவது திருத்தம் தொடர்பில் நாம் பேசிக்கொண்டிருக்கின்ற நிலையில் ஏற்கனவே அது அரசியலமைப்பில் சட்டமாக்கப்பட்டுள்ளது.

13 ஆவது திருத்தத்தில் என்னென்ன விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட வேண்டும் என தெளிவானதும் இறுதியான விடயங்களை கட்சித் தலைவர்களுக்கு வழங்கினால் அது தொடர்பில் கருத்துக்களை முன்வைக்க முடியும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டதாக அங்கஜன் இராமநாதன் மேலும் தெரிவித்தார். (ம-7,104)

# அரசு கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்

## சிறீதரன் எம்.பி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அரசாங்கம் தற்போதைய கல்விமுறையிலே மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கேட்டுக் கொண்டார்.

நேற்று யாழ்ப்பாணம் புன்னாலைக் கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலய் பரிசளிப்பு விழா நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனை தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்,

அரசாங்கம் மாணவர்களின் கல்வியிலே ஐந்தாம் தர புலமைப் பரிசில், பதினோராம் தரம் ஆகியவை பொருத்தமற்ற கல்வி முறை எனவும் இன்னமும் சரியான கல்விக் கொள்கைக்குள் அரசாங்கம் வரவில்லை என்றும் இதனை திருத்தி அமைப்பதன் மூலமே சிறந்த எதிர்காலமுள்ள மாணவர்களை உருவாக்க முடியும் என தெரிவித்தார்.

கல்லூரி முதல்வர் தலைமையில் இடம் பெற்ற பரிசில் வழங்கும் நிகழ்விலே வலய கல்விப் பணிப்பாளர் அயல் பாடசாலை ஆசிரியர்கள் பெற்றோர் கள் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ம-7,33)


Acupuncture Therapy

Acupuncture Treatment for all kinds of disorders

Book your appointment now


077 035 7307

Shan's Health care

K.K.S Road, Kokuvil.


# பல்கலைக்கழக மாணவர்கள் அரசுக்கு எதிராக போராட்டம்

## பொலிஸார் நீர்த்தாரை பிரயோகம்



(கொழும்பு)

200 நாட்களுக்கும் மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள களனி பல்கலைக்கழக மாணவ செயற்பாட்டாளர்கள் இருவரையும் விடுதலை செய்யுமாறு கோரி நேற்று கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் கூடிய மாணவ செயற்பாட்டாளர்களை கலைக்க பொலிஸார் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டனர்

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் மாணவ செயற்பாட்டாளர்கள் நேற்று பிற்பகல் 2 மணியளவில் லிப்டன் சுற்றுவட்டத்திற்கு அருகில் ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்தனர்.

200 நாட்களுக்கும் மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள களனி பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத் தலைவர் கெலும் முதன்னாயக்க மற்றும் தில்ஷான் ஹர்ஷன ஆகியோரை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

பொலிஸார் மற்றும் கலகத் தடுப்பு பிரிவினரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்ற பகுதிக்கு அழைக்கப்பட்டிருந்ததுடன், மாணவர்கள் கலைந்து செல்வதற்கு அவர்கள் கால அவகாசம் வழங்கியிருந்தனர்.

லிப்டன் சுற்றுவட்டத்தில் இருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை நோக்கி செல்ல முற்பட்ட போது, பொலிஸார் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டு மாணவர்களை கலைத்தனர். (ம-7)

# அதிபராக பதவியேற்பு

(வேலணை)

யா/வேலணை மத்திய கல்லூரியின் அதிபராக கஸ்ரன் றோய் நேற்று பதவியேற்றுக் கொண்டார்.

கல்லூரி அதிபராக இருந்த சி.கிருபாகரன் ஓய்வுபெற்றதையடுத்து இவர் அந்த இடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். (ம-7)


கண்ணீர் அஞ்சலி



அமரர் பொன்னன் வன்னியசிங்கம்

(லாலா சோப் உரிமையாளர் – அச்சுவேலி)

நிஜம் இன்றி நிழலில்லை – என்பது
பொய்த்துவிடும் படியாய் – உம்
நிஜம் இங்கு இல்லை என்றபோதும்
எம் நெஞ்சத்தில் என்றும் மறையாத
நிழலாகி மாறாத நினைவாகி
எம்மோடு வாழும் உம் உருவம்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மலர்வு 11.08.1944

உதிர்வு 23.07.2023

ரேஸ்ரா பிறைவேட் லிமிட்டட் இயக்குநரும் ஊழியர்களும்

(16530)

மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்

வளர்ப்புக்கான கால்நடைகள் ஏலவிற்பனை

எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல கறவைப்பசுப் பண்ணையில் பராமரிக்கப்பட்டு வரும் கால்நடைகளுள் எமது பராமரிப்பிற்கு மேலதிகமாக உள்ள கால்நடைகளை வளர்ப்புக்காக எதிர்வரும் 05.08.2023 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கீழ்க் குறிப்பிடப்படும் முகவரியில் உள்ள எமது இல்ல வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப பெற விரும்புவோர் குறித்த திகதியில் நேரடியாக வருகை தந்து ஏல விற்பனையின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு குறித்த விற்பனைத் திகதிக்கு முன் கால்நடைகளைப் பார்வையிட விரும்புவோர் வாரத்தில் ஏழு நாட்களும் காலை 8.00 - 10.30, மாலை 4.00 - 5.00 மணிக்கு முன் பார்வையிடலாம். அத்தோடு தாங்கள் ஏலத்தில் கோரிய பணத்தொகையினை உடன் செலுத்துவதுடன் அன்றைய தினமே தங்களது கால்நடைகளை இல்ல வளாகத்திலிருந்து வெளிக் கொண்டு செல்லுதல் வேண்டும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

ஏல விற்பனை செய்யப்படும் இடம்

மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல பிரதான வளாகம்

ஜெயந்திநகர்,

கிளிநொச்சி.

021 492 3118, 077 324 0950

(C-6968)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சில சலுகைகள் நீக்கம்

## அரசாங்கம் அதிரடி



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு முன்னர் வழங்கப்பட்டு வந்த சில சலுகைகளை இடைநிறுத்துவதற்கு ஜனாதிபதி அலுவலகம் தீர்மானம் எடுத்துள்ளது.

உத்தியோகபூர்வ இல்லங்களின் மின்சாரம், நீர் கட்டணங்கள் மற்றும் மொபைல் போன் கட்டணங்களுக்கான சலுகைகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மாதத்திற்கான செலவு விபரங்களை முன்னாள் ஜனாதிபதி ஒருவரின் செயலாளர், ஜனாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பித்த நிலையில் சலுகைகளை இடைநிறுத்துவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

சட்டமா அதிபரின் அறிவுறுத்தலைப் பின்பற்றி, ஜனாதிபதி அலுவலகம் இனிமேல் முன்னாள் ஜனாதிபதிகளின் எந்தவொரு செலவையும் தீர்க்காது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு வழங்கப்பட வேண்டிய சிறப்புரிமைகள் தொடர்பாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் சட்டமா அதிபர் அலுவலகம் இந்த உத்தரவு பிறப்பித்துள்ளது.

தீர்ப்பின்படி, முன்னாள் ஜனாதிபதிகளுக்கு உத்தியோகபூர்வ இல்லம், வாகன பராமரிப்பு மற்றும் எரிபொருளுக்கான நிதி மட்டுமே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# கறுப்பு ஜூலை படுகொலைக்கு நீதிகோரி பிரித்தானியாவில் திரண்ட தமிழர்கள்

(லண்டன்)

கறுப்பு ஜூலை படுகொலை இடம்பெற்று 40 ஆண்டுகால நினைவு நாளினை முன்னிட்டு பிரித் தானியாவின் பெரு நகர மத்தியில் நேற்று முன்தினம் திரண்ட புலம்பெயர் தமிழர்கள் நீதி கோரி எழுச்சி பேரணி ஒன்றை நடத்தினர்.





ஈழம் அமைதலே தமிழ் மக்களின் நிரந்தர பாதுகாப்பிற்கான ஒரே தீர்வு அத்துடன் இலங்கையில் சுபீட்சத்திற்கும் ஸ்திரத் தன்மைக்குமான பாதையும் இதுவேதான் என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு ஒன்று திரண்ட புலம்பெயர் தமிழர்கள் பிரித்தானிய அரசிற்கும் சர்வதேசத்திற்கும் தமது கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இனப்படுகொலை நடைபெற்று 40 ஆண்டுகள் ஆன நிலையில் இதுவரையில் எந்தவித நீதியும் கிடைக்காத நிலையில் சர்வதேசத்திடம் நீதி கோரி பிரித்தானிய புலம்பெயர் தமிழர்கள் எழுச்சி பேரணியில் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வில் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் என பலர் கலந்து கொண்டனர். (நி -5)

# மருந்து தட்டுப்பாட்டால் சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சைகள் முற்றாக பாதிப்பு

(கொழும்பு)

சிறுநீரக மாற்று சத்திர கிச்சைக்கு அவசியமான மருந்திற்கு தட்டுப்பாடு நிலவுவதன் காரணமாக சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

சிறுநீரகமாற்று சத்திர சிகிச்சைக்கு முன்னதாக நோயாளிக்கு வழங்கப்படும் மருந்து போத்தல் ஒன்றின் விலை 300,000 ரூபாய் எனவும் சிறுநீரகமாற்று சத்திரசிகிச்சை இடம்பெறும் மருத்துவமனைகளில் இந்த மருந்துமுற்றாக இல்லை எனவும் தகவல்கள் கிடைத்துள்ளதாக தென்னிலங்கை ஊடகம் தெரிவித்துள்ளது.

தனியார் மருத்துவ மனைகளிலும் இந்த மருந்திற்கு தட்டுப்பாடு நிலவுகின்றது இந்த மருந்திற்கு மாற்றீடான மருந்து தனியார்வைத்தியசாலையில் உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த போத்தல் ஒன்றின் விலை 60,000 ரூபாய் எனவும் நோயாளியின் உடல் எடையின் அடிப்படையில் இந்த மருந்தினைஏற்றுவதென்றால் 4 லட்சம் ரூபாய் செலவாகும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி-5)

# 24 புள்ளிகளை இழந்தால் சாரதி அனுமதிப் பத்திரம் ரத்து

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

போக்குவரத்து விதி மீறல்களுக்கான தகைமை இழப்பு புள்ளிச் செயல்முறை அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த முறையின் கீழ் 24 புள்ளிகளைபெறும் சாரதியின் அனுமதிப்பத்திரம் உடனடியாக இரத்து செய்யப்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

இதற்கிடையில், வீதிகளில் இடம்பெறும் தவறுகளுக்கு குறித்த வீதியிலே அபராதம் அறவிடப்படும் முறையை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கான அனைத்து பரிவர்த்தனைகளையும் டெபிட் அல்லது கிரெடிட் கார்ட் மூலம் பெற்றுக் கொள்ள மோட்டார் போக்குவரத்து திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஏழு தசாப்தங்களாக நடைமுறையில் உள்ள மோட்டார் போக்குவரத்து சட்டத்தை புதுப் பித்து புதிய சட்டத்தை அறி முகப்படுத்த போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டார். (நி-5)

# ஆசிரியர்களை இணைப்பதற்கான போட்டிப் பரீட்சை விரைவில்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

உயர்தரத்தின் சில பாடங்களுக்கான ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சையை நடத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, உயர் தரத்தின் கணிதம், விஞ்ஞானம், சர்வதேச மொழிகள், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்காக ஆசிரியர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதன்படி மாகாண மட்டத்தில் 5450 பேர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

ஆசிரியர் சேவை விதிமுறைகளுக்கு அமைவாக 35 வயதுக்கு குறைவான, தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளபட்டதாரிகள் இதற்காக விண்ணப்பிக்க முடியும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த போட்டிப் பரீட்சைக்காக எதிர் வரும் சில வாரங்களில் விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன. (நி-5)

# உலக உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தினால் 8300 மெட்ரிக் தொன் யூரியா நன்கொடை

(கொழும்பு)

8300 மெட்ரிக் தொன் யூரியா உரத்தை இலங்கைக்கு நன்கொடையாக வழங்க உலக உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் தீர்மானித்துள்ளது.

இந்த யூரியா உரத் தொகையானது, பெரும்போகத்தில் நெற்செய்கைக்கு குறைவாக பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் குருணாகல் மாவட்டத்திலும் உள்ள விவசாயிகளுக்கும் இந்த நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக உலக உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்த செயற்றிட்டத்திற்கு ஜப்பான் அரசாங்கம் நிதியுதவி வழங்கவுள்ளது.

இதுவரை பல்வேறு சந்தர்ப்பங்களில் நாட்டின் விவசாயிகளுக்கு 15000 மெட்ரிக் தொன் வரையான யூரியா உரம், உலக உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தினால் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரமாண்ட வாகனப் பேரணியுடன் ஆரம்பமான லங்கா பிரீமியர் லீக்




லங்கா பிரீமியர் லீக் 2023 கிரிக்கெட் தொடரின் 4 ஆவது சீசனானது இம்மாதம் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில் இது தொடர்பான ஆரம்ப நிகழ்வானது அண்மையில் கார் பேரணியுடன் கொழும்பில் வெகு விமர்சையாக ஆரம்பமானது.

அந்தவகையில் லங்கா பிரீமியர் லீக் தொடரின் பணிப்பாளர் சமந்த தொடன்வெலவின் தலைமையில் இடம்பெற்ற இப்பேரணியானது SLC தலைமையகத்தில் இருந்து தனது பயணத்தை ஆரம்பித்து சுதந்திர சதுக்கம், துன்முல்லை, காலி வீதி, இலங்கை வங்கி மாவத்தை மற்றும் கொழும்பு 01 ஆகிய இடங்களைக் கடந்து, டெக்னிக்கல் சந்தி ஊடாக மருதானையை வந்தடைந்தது.

இப்பேரணியில் சுமார் 40 இற்கும் மேற்பட்ட கிளாசிக் மினி கூப்பர் மற்றும் மோக்கார்கள் அணிவகுத்துச்சென்றதாகவும் அது பார்வையாளர்களின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(4)

# உலகக் கிண்ண தொடரின் இந்தியா- பாக். போட்டியில் மாற்றம்?



வரும் ஒக்டோபர் மாதம் தொடங்க இருக்கும் ஐ.சி.சியின் உலகக்கிண்ண தொடரில் இந்தியா, பாகிஸ்தான் போட்டி மாற்றம் செய்யப்பட வாய்ப்பு இருப்பதாக தகவல் வெளியாகி ரசிகர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வரும் ஒக்டோபர் 15ம் திகதி ஐ.சி.சியின் உலகக் கிண்ண தொடர் நடைபெற உள்ளது. இத்தொடருக்கான அட்டவணை சமீபத்தில் வெளியிடப்பட்டது. ஒக்டோபர் 15 ஆம் திகதி முதல் நவம்பர் 12 ஆம் திகதி வரை இத்தொடரில் லீக் சுற்றுப் போட்டிகள் நடைபெற உள்ளன.

இந்திய அணி 9 மைதானங்களில் கடந்த மாத இறுதியில் ஐ.சி.சி உலகக் கிண்ண தொடருக்கான அட்டவணை வெளியிடப்பட்டது. அதில் ஒக்டோபர்5 ஆம் திகதி முதல் நவம்பர்12 ஆம் திகதி வரை லீக் சுற்றுப் போட்டிகள் நடக்கவுள்ளது.

இதில் 45 லீக் போட்டிகள் நடைபெற உள்ளன.

ஒக்டோபர் 15 ஆம் திகதி உலகக்கிண்ண தொடரில் இந்தியாவை பாகிஸ்தான் எதிர்த்து விளையாட உள்ளது. இந்தப் போட்டி அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தனர்.

ஐ.சி.சி உலகக்கிண்ண தொடரில் ஒக்டோபர்15ஆம் திகதி திட்டமிடப்பட்டுள்ள இந்தியா - பாகிஸ்தான் போட்டி, திகதி மாற்றம் செய்ய வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதுகுறித்து பி.சி.சி.ஐ மற்றும் ஐ.சி.சி நிர்வாகிகள் ஆலோசித்து வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், தற்போது இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தை திகதி மாற்றம் செய்ய வாய்ப்பு இருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது. இந்தச் செய்தி வெளியாகி ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.


ஹோட்டல்களில் ஆயிரக்கணக்கானோர் பணம் கொடுத்து முன்பதிவு செய்து வைத்துள்ளனர். திகதி மாற்றம் செய்யப்பட்டால் முன்பதிவு செய்தவர்களுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. (4)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2874

நர்மதா




துசியா




வக்சா





தர்மிதன்




அர்ச்சுன்




மிதுசன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறி விலைகள் மேலும் அதிகரிப்பு

(கொழும்பு)

சந்தையில் கரட் மற்றும் போஞ்சி ஆகியவற்றின் விலைகள் அதிகமாக காணப்படுவதாக பொருளாதார நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் பேலியகொட மெனிங் சந்தையில் ஒரு கிலோ போஞ்சியின் மொத்த விற்பனை விலை 300 முதல் 350 ரூபா வரையிலும், மீகொட பொருளாதார மத்திய நிலையத்தில் 400 ரூபாவிற்கும் அதிகமாக விற்பனை செய்யப்பட்டுள்ளது.பேலியகொட, தம்புள்ளை, மீகொட மற்றும் நுவரெலியா ஆகிய பொருளாதார மத்திய நிலையங்களில் கரட்டின் மொத்த விலை 400 முதல் 470 ரூபா வரை பதிவாகியுள்ளது.

இருப்பினும், வெண்டைக்காய் விலை சிறிது குறைந்துள்ளது. பல பொருளாதார நிலையங்களில் பச்சை மிளகாயின் மொத்த விலை 500 ரூபாவை அண்மித்துள்ளதுடன், கெப்பிட்டிபொல பொருளாதார நிலையத்தில் 600 முதல் 650 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. (நி-5)

# சுற்றுலாப் பயணிகளுடன் பள்ளத்தில் பாய்ந்த பஸ்



(கொழும்பு)

வெல்லவாய - கொஸ்லந்த பிரதான வீதியில், கொஸ்லந்த பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹிவல்கந்துர பகுதியில் சுற்றுலா பயணிகளை ஏற்றிச் சென்ற வான் ஒன்று நேற்று காலை வீதியை விட்டு விலகி பள்ளத்தில் கவிழ்ந்துள்ளது.

விபத்தின் போது, வானில் சாரதி மற்றும் நான்கு பயணிகள் பயணித்துள்ளதுடன். விபத்தில் எவருக்கும் பாரிய காயங்கள் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வான் பாரிய சேதங்களுக்கு உள்ளாகியுள்ளதுடன் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஸ்லந்த பொலிஸ் நிலைய அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். (நி-5)




# இராசிபலன்

27.07.2023
ஆடி 11, வியாழக்கிழமை
நவமி முற்பகல் 11.07 மணிவரை
விசாகம் முன்னிரவு 9.47 மணிவரை

சுபநேரம் -7.32-9.02 மணிவரை
இராகுகாலம்-1.32-3.02 மணிவரை
சந்திராஷ்டமம்-
அச்சுவினி ,பரணி.

வளவன்

**மேஷம்** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம் போசன சுகமுண்டு.

**கடகம்** தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், மனதில் நீண்ட நாட்களாக இருந்த பாரம் குறையும், வாகன சுகமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும் , நண்பர்கள் பக்கபலமாக இருப்பர், ஆழ்ந்த சிந்தனையுண்டு, பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**மகரம்** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், எதிர்பாராத உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன நன்மையுண்டு.

**ரிஷபம்** நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், கௌரவமான நாள்.

**சிம்மம்** குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, ஆதாயம் அதிகரிக்கும் நாள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** வீட்டுப் பிரச்சினைகள் சுமூகமாக முடியும், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கும்பம்** தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம், வீண் பழிகள் அகலும், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மிதுனம்** மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், செய்தொழில் மேன்மையுண்டு.

**கன்னி** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, தனவரவுண்டு.

**தனுசு** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும், பிரச்சினை [illegible] விடுபடுவீர்கள்.

**மீனம்** பிறருடைய வேலைகளையும் நீங்கள் எடுத்துச் செய்யும் சூழ்நிலை ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள்.

கடன் வாங்குபவன் கவலையையும் சேர்த்து வாங்குகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மண்டைதீவு வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கத்தின் அனுசரணையில் இலவச மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்பட உள்ளது.

குறித்த இலவச .மருத்துவ முகாம், எதிர்வரும் ஒகஸ்ட் 8ஆம் திகதி காலை 8 மணி முதல் 12 மணி வரை மண்டைதீவு மருத்துவமனை வளாகத்தில் இடம் பெறவுள்ளது.

குறித்த மருத்துவ முகாமில் இலவச நீரிழிவு பரிசோதனை செய்ய விரும்பியவர்கள் 12 மணித்தியாலங்கள் நீர் மற்றும் உணவு என்பவற்றை எடுத்துக் கொள்ளாமல் வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த முகாமில்இலவச நீரிழிவு பரி சோதனைஇலவச இரத்த அழுத்தப் பரிசோதனை யாழ். போதனா மருத்துவமனை வைத்தியர்களின் பங்குபற்றுதலுடன் இடம் பெற்று மருந்துகளும் வழங்கப்படும்.

இதேவேளை இலவச கண் பரிசோதனை செய்யப்பட்டு அவர்களில் 150 பேருக்கு இலவச மூக்கு கண்ணாடியும் வழங்கப்படும். (4-5)

# வரி செலுத்தாவிட்டால் அரச சேவை ஸ்தம்பிக்கும்

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற சேவைகளை சீராகக் கொண்டுசெல்ல வேண்டும் என்றால் மக்கள் வரி செலுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளக்கூடாது என வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்துள்ளார்.**

வரிக்கொள்கை மற்றும் IMF நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தும் வகையில் ஒன்றிணைந்த நாட்டை கட்டியெழுப்புவோம் என்ற நிகழ்வு யாழ்ப்பாணம் 'சரஸ்வதி மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வரியை சரியான வழிமுறையில் செலுத்துவதற்கு நாங்கள் ஒவ்வொருவரும் முன்வர வேண்டும் .நாட்டின் நலன் கருதியதான இந்த நோக்கத்தை மக்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதும் இங்கே மிக முக்கியமான ஒரு விடயமாக இருக்கின்றது.

தற்போது அதிகமானோர் யாழ்ப்பாணத்திலிருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் இருக்கின்றார்கள்.

புலம்பெயர்ந்தவர்களாக இருக்கின்றவர்களுக்கு தெரியும் உலக நாடுகளில் எவ்விதமாக இந்த வரி அறவீடுசெய்யப்படுகின்றது என்று. அதுமட்டுமல்லாது குறித்த வரி அந்நாடுகளின் வருமானத்தில் எத்தகைய பெரும் பகுதியாக காணப்படுகின்றது என்றும் உணர்ந்துகொள்ள முடியும்.

எனவே அந்த வகையிலே எங்களுடைய நாட்டிலே வரி அறவீடு தொடர்பில் மிக இலகுவான காரியமாக அல்லது புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும் என நினைக்கின்றேன்.

பலர் அந்த வரியில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கும் நடைமுறைகளை கையாளுகின்றனர்.

எனவே நாங்கள் இந்த



நாட்டின் குடிமக்கள் என்ற ரீதியிலும் இந்த நாட்டிலே பல தேவைகளை நாங்கள் பெற்றுக் கொள்கின்றவர்கள் என்ற ரீதியிலும் எங்களுக்கு ஒரு பொறுப்பு இருக்கின்றது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதனால் இந்த வரிக் கொள்கையில் நாங்கள் இணைந்து நாட்டின் வளர்ச்சிக்கு பங்காளர்களாக வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார்.(4-5)

# கண்காட்சியும் விற்பனையும் பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையின் 200 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு 28 ஆம் திகதி வெள்ளிக் கிழமை நடைபெறவிருந்த கண்காட்சியும் விற்பனையும் நிகழ்வு மட்டும் தவிர்க்கமுடியாத காரணத்தால் 3 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும் என்பதையும் 29 ஆம் திகதி சனிக் கிழமை அன்றைய நிகழ்வு திட்டமட்டபடி அன் றைய தினம் நடை பெறும் என பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (4-5)

# இலவச கண்புரை சத்திர சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரதேசத்தில் வசிக்கும் கண்புரை சத்திர சிகிச்சை செய்யவேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச கண்பரி சோதனை முகாம் நாளை மறுதினம்29 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் இடம் பெறவுள்ளது.

அதேபோன்று பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவினைச் சேர்ந்த கண் புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களைத் தெரிவுசெய்யும் இலவச மருத்துவ முகாம் அன்றைய தினமே காலை 9.00 மணி தொடக்கம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையிலும் நடைபெறவுள்ளது.

குறித்த முகாமில் கண் புரை சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான சத்திர சிகிச்சை மேற்கொள்ளும் திகதி பின்னர் அவர்களுக்கு அறியத்தரப்படும்.

கண்புரை சத்திரசிகிச்சைக்கு தெரிவு செய்யப்படும் நோயாளர்களை அந்தந்தப் பிரதேசத்திற்குரிய மருத்துவ மனைகளில் இருந்து யாழ்.போதனா மருத்துவமனைக்கு அழைத்து வருவதற்கும், சத்திரசிகிச்சை முடிவடைந்த பின்னர் மீண்டும் யாழ் போதனா மருத்துவ மனையில் இருந்து அவர்களது பிரதேசத்திலுள்ள மருத்துவமனைக்கு கூட்டிச் செல்வதற்கான போக்கு வரத்து வசதிகள் சுகாதார திணைக்களத்தினரால் இலவசமாக மேற்கொள்ளப்படும்.

எனவே கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளர்கள் மேற்படி பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்களது பெயர்களைப் பதிவு செய்யு மாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (4-5)

# மூன்றாவது நாளாகவும் காணி அளவீடு மக்கள் எதிர்ப்பால் தடுத்து நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களுக்கு சொந்தமான காணிகளை கடற்படையினருக்கு அபகரிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் காணி அளவீட்டு முயற்சி நேற்று 3 ஆவது நாளாகவும் கட்டைக்காடு பகுதியில் இடம் பெற்றுள்ளது.

வடமராட்சி கிழக்கு உடுத்துறை 10ம் வட்டாரத்தில் உள்ள தனியார் ஒருவருக்கு சொந்தமான காணியை கடற்படையினருக்காக அளவீடு செய்யும் முயற்சி நேற்று பொதுமக்களின் எதிர்ப்பு காரணமாக தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் இலங்கை கடற்படையினருக்கான காணி அளவீடு மேற்கொள்ள எடுக்கப்பட்ட முயற்சி காணி உரிமையாளர் மற்றும் அரசியல் பிரமுகர்களின் எதிர்ப்பினால் கைவிடப்பட்டுள்ளது.

குறித்த காணி உரிமையாளருக்கு யாழ். மாவட்ட நில அளவைத் திணைக்களத்தினரால் காணி சுவீகரிப்பு தொடர்பில் அறிவுறுத்தல் கடிதம் வழங்கப்பட்டிருந்த நிலையில் காலை குறித்த காணியை அளவீடு செய்வதற்கு சென்றுள்ளனர்.

இந்நிலையில் மக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்களின் எதிர்ப்பு காரணமாக குறித்த அளவீட்டு பணி தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது. (4-5-60-104)

# கைக்குண்டு மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குழிப் பகுதியில் உள்ள காணியொன்றில் இருந்து நேற்று புதன்கிழமை வெடிக்காத நிலையில் கைக் குண்டு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

பயன்படுத்தாத நிலையில் காணப்பட்ட மலசலகூட குழியை துப்பரவு செய்த போதே மேற்படி கைக் குண்டு அடையாளம் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ள நிலையில் வெடிபொருளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளைபொலிஸார்முன்னெடுத்தனர். (4-5-30)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவிற்கு செல்லவிருக்கும் இலங்கைக் கறுவா

(கொழும்பு)

உலகம் முழுவதும் வாசனை திரவியங்களுக் கென பெயர் பெற்ற இலங் கையில் இருந்து கறுவா மெக்ஸிகோ மற்றும் அமெரி க்கா போன்ற நாடுகளுக் கும் பேரு போன்ற நாடுக ளுக்கும் ஏற்றுமதி செய்யப் படுகிறது.

ஏற்றுமதி சந்தையில் கசியா கறுவா மற்றும் கறுவா என இரண்டு வகை யான கறுவாப்பட்டைகள் உள்ளன.

இவற்றில், கசியா கறுவாப் பட்டையின் தரம் உண்மை யான கறுவாப்பட்டையின் தர த்தை விட குறைவாக இருப்ப தால், இலங்கையில் உற் பத்தி செய்யப்படும் உண் மையான கறுவாப்பட்டைக்கு இன்னும் அதிக கேள்வி உள்ளது.

இந்நிலையில், எதிர் கால த்தில் இலங்கையில் இருந்து சீனாவிற்கு கறுவாவை ஏற்று மதி செய்வதற்கான பேச்சு வார்த்தைகள் தற்போது இடம் பெற்று வருவதாக ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ.பி.பி. திஸ்னா தெரிவித்துள்ளார்.

கசியா கறுவாப்பட்டையை அதி கம் நுகரும் நாடுகளில், சீனா தற்போது முதலிடத் தில் உள்ளது.

எனவே, சீனாவுக்கு கறு வாப்பட்டை ஏற்றுமதி செய் யும் சந்தர்ப்பம் கிடை த்தால், அது நாட்டின் ஏற்றுமதித் துறையில் பாரிய வளர்ச்சி யாக அமையும் என பணிப் பாளர் நாயகம் தெரிவித் துள்ளார். (நி-5)

# பிம்ஸ்டெக் செயலாளர் நாயகம்-ரணில் சந்திப்பு



(கொழும்பு)

பிம்ஸ்டெக் செயலாளர் நாய கம் டென்சின் லெக்பெல் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவ லகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தார்.

பிம்ஸ்டெக் என்பது பங்களா தேஷ், பூட்டான், இந்தியா, மியான்மார், நேபாளம், இல ங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய 7 தெற்கு மற்றும் தென் கிழக்காசிய நாடுகளின் பிராந் தியக் கூட்டணியாகும்.

வங்காள விரிகுடாவை ஒட் டிய தெற்காசிய மற்றும் தென் கிழக்காசிய நாடுகளுக்கு இடையே தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை உருவாக்குவதே இதன் முக்கிய நோக்கமாகும். (நி-5)

# இலங்கைத் தமிழரசுக்கட்சி ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவு

(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயகத்தில் நாளை நடைபெறவுள்ள ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவை வழங்குவதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில்,

ஜூலை கலவரம் நடைபெற்று 40 ஆண்டுகள் நிறைவு பெறும் தமிழினத்திற்கு நீதி கிடைக்கவில்லை என்பது உலகறிந்த வரலாறாகும்.

தமிழின அழிப்பிற்கு ஆளாகிய தமிழின மக்களின் இக்காலம் துக்க காலமாகும். தங்கள் தேசத்துக்கு, தமிழ் மக்களுக்கு நீதி கோரி காணாமல் ஆக்கப்பட்ட தாய்க்குலம் தமிழ் மக்கள் ஆறாத் துயருடன் கண்ணீரும் கம்பலையுமாய் நாளை 28 ஆம் திகதி துக்கநாளாக அறிவித்துள்ளமையை நாமெல்லாம் ஆதரித்து ஹர்த்தாலாக கடைப்பிடிக்கின்றோம்.

தமிழர் மனிதகுலம் புதைகுழிக்குள் புதைக்கப்பட்டு அழிக்கப்பட்டமை இலங்கையில் கறைபடிந்த வரலாறாயினும் அந்த ஆத்மாக்களுக்கு ஆறுதலும் வருங்கால தமிழினத்திற்கு நீதியும் விடுதலையும் கிடைக்க வேண்டி நடைபெறும் கிளர்ச்சிகளையும் போராட்டங்களையும் ஆதரித்து கடைப்பிடிக்க வேண்டியது பெரும் கடப்பாடாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.(4-5)

# கறுப்பு ஜூலை நினைவேந்தல் நாளை கிளிநொச்சியில்

(தருமபுரம்)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின், கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் இன்று வியாழக்கிழமை, மாலை 4 மணிக்கு, கிளிநொச்சி சேவைச்சந்தை முன்றலில் கறுப்பு ஜூலை தமிழின அழிப்பின் 40 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

மனிதப் பேரவலத்துக்கும், தமிழின அழிப்புக்கும் தோற்று வாயான கறுப்பு ஜூலைப் படுகொலையில் உயிர்துறந்த உற வுகளை அஞ்சலிக்கும் இந் நினைவேந்தல் நிகழ்வில் அனை த்துப் பொதுமக்களையும் இணைந்துகொள்ளுமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறிதரன் அழைப்பு விடுத்துள்ளார். (4-5-316)

# திரவ பால் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

2030 ஆம் ஆண்டளவில் திரவ பால் உற்பத்தியை 50 வீதத்தால் அதிகரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் 19 ஆவது அமர்வில் இத்தாலியில் உணவு மற்றும் விவசாயத் திற்கான மரபணு வளங்கள் தொடர்பான ஆணைக்குழுவில் உரையாற்றும்போது, அமைச்சும் இலங்கையின் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களமும் இந்த சவாலை முறியடிக்க பல திட்டங்களை முன்னெடுத்துள்ளதாக தெரி வித்தார்.

எனவே, இந்திய அரசின் ஆதரவுடன் இலங்கையில் திரவப் பால் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், 500இற்கும் மேற்பட்ட மாடுகளைக் கொண்ட பாரிய பால் பண்ணைகளை மேம்படுத்துவதற்கான இரண்டு திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது, இலங்கையின் பால் உற்பத்தி 35-40 சதவீதமாக உள்ளது. 2030ஆம் ஆண்டுக்குள் இலங்கைக்குத் தேவை யான திரவப் பால் உற்பத்தியில் 50 சதவீதத்தை உற்பத்தி செய்வதே எங்கள் அரசாங்கத்தின் இலக்கு. (நி-5)


## நல்லூர் பிரதச சபை - கொக்குவில்
## தனியார் சாரதி சேவை பெற்றுக்கொள்ளல் தொடர்பான கேள்வி கோரல்-2023/2024

1. நல்லூர் பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் சாரதி சேவையை வழங்கலுக்கான வியாபாரப்பதிவு செய்த தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடத்திற்கு சாரதி சேவையினை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 2023.07.27 மு.ப 9.00 - 2023.08.09 பி.ப 3.00 மணிவரை**
**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 2023.08.10 மு.ப 10.00 மணி வரை**
**கேள்வி திறக்கும் திகதி : 2023.08.10 மு.ப 10.30 மணி**

2. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள் ளப்படும்.

3. விலைக்கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாமல் இருக்க வேண்டும்.

4. கேள்விதாரர் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்த நிலையான தொலைபேசி தொடர்பிலக்கத்துடன் கூடிய ஒரு பதிவுக் காரியாலயத்தையோ அல்லது கிளைக் காரியாலயத்தையோ கொண்டிருத்தல் வேண்டும். அவசியமேற்படுமிடத்து குறித்த முகவரி நேரில் பரிசீலிக்கப்படும். மேலும் **சேவை வழங்குநர் தெரிவில் இவ்விடயம் முக்கியமாக கருத்திற்கொள்ளப்படும்.**

5. தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்ப கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை, கொக்குவிலில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரை மீளளிக்க முடியாத கேள்வி படிவக்கட்டணமாக **ரூபா 2,000.00** இனையும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணமாக **ரூபா 25,000.00** இனையும் பணமாகச் செலுத்துவதன் மூலம் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

6. தெரிவு செய்யப்படும் நிறுவனம் செயலாற்றுகை பிணை முறியாக **ரூபா 400, 000/=** ஐ வங்கியில் வைப்புச் செய்து வங்கிப்பிணைமுறி ஒன்றினைச்சமர்ப்பித்து ஒப்பந்தமொன்றை செய்து கொள்ள வேண்டும்.

7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், உள்ளூராட்சி பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும், மூலப்படிவம் கொண்ட தபாலுறையில் **மூலப்பிரதி** எனவும் இணைப்படிவத்தில் **இணைப்பிரதி** எனவும் எழுதப்பட்டு இணைப்பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கும் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (பதிவுத்தபால் முடிவுத்திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறவேண்டும்) மூலப்பிரதியை அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய விலைக் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

8. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.

9. கேள்வி கோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்வி கோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்கள்/ கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்

10. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக **நல்லூர் பிரதேச சபை பெறுகைக்குழுவால்** எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.

11. மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | சாரதி சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|
| 01 | நல்லூர் பிரதேசசபை, தலைமை அலுவலகம், கொக்குவில் | 05 | 01.09.2023 - 31.12.2024 வரை (16 மாதங்கள். ) |

**தலைவர்,**
**உள்ளூராட்சி பெறுகைக்குழு,**
**நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில்.**

(c-6967) **2023.07.27**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 171

## தாய்மையின் மகத்துவம்

பல விதமான பரிசோதனைகளுக்கு பின் டாக்டரை சந்திக்கச்சென்றேன்.

"இது ஒண்ணும் பெரிய விஷயம் இல்லம்மா, இந்த வயசுல எல்லா பெண்களுக்கும் வர்ற பிரச்சினை தான், கர்ப்பப்பை அகற்றிட்டா எல்லாம் சரியாயிடும். இரண்டு நாள் ஆஸ்பிட்டலில் இருந்தா போதும், யோசிச்சு சொல்லுங்க" என்று சொல்லிமுடிக்க எத்தனையோ யோசனைகளோடு வீடு வந்தேன். கணவரிடம் சொல்ல, பயப்படாதம்மா ஒண்ணும் ஆகாது. எல்லாரும் பண்ணிக்கிறது தானே என்று தைரியப்படுத்தினார்.

மகன்களிடமும் மகள்களிடமும் சொல்ல, இப்போ இருக்கிற நவீன தொழில்நுட்பத்தில இதெல்லாம் ரொம்ப ரொம்ப சாதாரண ஆபரேஷன் மா, நகத்தை வெட்டி எடுக்கிற மாதிரி சுலபமா பண்ணிடறாங்க, பயப்படறதுக்கு எதுவுமே இல்லை, தைரியமா இரும்மா என்று சமாதானப் படுத்தினார்கள். எனக்கு மட்டும் தயக்கமாகவே இருந்தது.

ஆபரேசன் நாளன்று பிள்ளைகளும் பேரப்பிள்ளை களும் கூட ஆஸ்பிடலுக்கு வந்துவிட்டார்கள். என்னுடைய தயக்கம் மட்டும் போகவே இல்லை.

ஆபரேசன் முடிந்து சில மணிநேரத்தில் கண்விழித் தேன். கணவர், குழந்தைகள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள் என எல்லோரும் பார்க்க வந்துவிட்டார்கள்!

ஆனால் நான் பார்க்க விரும்பியது இவர்கள் யாரையும் இல்லை, ஆபரேசன் செய்து எடுக்கப்பட்ட என்னுடைய கர்ப்பப்பையை பார்க்கவேண்டும் என்று தோன்றியது.

ஏற்கனவே நான் சொல்லி வைத்ததால் குளிர்சாதனப் பெட்டிக்குள் எடுத்து வைத்திருப்பதாக சொன்னார்கள்.

கஷ்டப்பட்டு எழுந்தேன். கஷ்டப்பட்டு நடந்தேன். அடி வயிற்றின் வலி நடக்க முடியாமல் தடுத்தது. ஆனாலும் நடந்தேன்.

குளிர்சாதனப்பெட்டியில் இருந்து வெளியே எடுத்தார்கள், பிளாஸ்டிக் பையால் சுற்றப்பட்டு இருந்தது! மெல்ல தடவியபடி தொட்டுப்பார்த்தேன்.

அழகான அந்த கருவறை அங்கங்கு வீங்கியும் முடிச்சுகளாகியும் சிறுசிறு கட்டிகளோடும் உருக்குலைந்து போயிருந்தது. மற்றவர்களை பொறுத்தவரை இது சாதாரண கர்ப்பப்பை. என்னை பொறுத்தவரை இது என்னுடைய கடவுள். என் நான்கு குழந்தைகளின் பார த்தை மட்டும் தான் நான் சுமந்திருக்கிறேன். பாதுகாப்பாய் சுமந்தது இந்த கருவறைதான்.

ஒரு தாயாக இந்த உலகத்தில் பெருமையோடு வலம்வர காரணமே இந்த கருவறை தான்!

என் குழந்தைகளை கலைந்து போகாமல் காப்பாற்றியது இந்த கடவுள் தான். எல்லோரும் எடுத்துவிடலாம் என கூறியபோது நான் தயங்கியதன் காரணம் உயிருக்கு பயந்து அல்ல.

என்னை தாயாக்கிய இந்த தாயை இழந்துவிடுவேனோ என்றுதான். நாலைந்து வருடங்களாய் குழந்தையின்றி நான் அலைந்த கோயில்களுக்கு தெரியும் என் வலி.

மலடி என்று சொல்லி என் மாமியார் வேறு பெண் பார்க்க தேடியபோது ஏற்பட்ட ரணத்தை குணமாக்கியது இந்த கருவறை தான்.

முதல் குழந்தையை இழந்தது போன்ற இந்த வலியை முதன்முதலாக உணர்கிறேன்!

நான் உன்னை சரியாக பார்த்துக்கொள்ளாமல் விட்டுவிட்டேனோ என்கின்ற குற்றவுணர்ச்சி மேலோங்க, எல்லாம் தந்த அந்த கருவறைக்கு சில துளி கண்ணீரை மட்டுமே காணிக்கையாக்கி விட்டு அங்கிருந்து திரும்பு கிறேன். அந்த கடவுள் தந்த அத்தனை உறவுகளும் என்னைத் தாங்க ஓடிவருகிறது. உடலளவில் கொஞ்சம் லேசாகிறேன், மனது மட்டுமே கனமாகிறது.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# 115 அடி புத்தர் சிலை தீப்பிடித்து சேதம்



(பீஜிங்)

சீனாவின் கான்சு மாகா ணத்தில் உள்ள ஷான்டன் பௌத்த விகாரையில் கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் 115 மீற்றர் உயரம் கொண்ட பிரம்மாண்ட புத்தர் சிலை சேதம் அடைந்துள் ளது.

கி.பி. 425ஆம் ஆண்டு காலத்தைச் சேர்ந்த சிலை ஒன்றைப் பார்த்து இப்புத்தர் சிலை வடிவமைக்கப்பட்டுள்ள தாகவும் சிலையின் ஒரு பகுதி மட்டுமே தீயில் சேதம் அடைந்துள்ளதாகவும், விகா ரையின் கலாசார நினைவுச் சின்னங்கள் சேதமடையா மல் இருப்பதாகவும் உள்ளூர் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இத்தீ விபத்தில் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் விபத் துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் அவர்கள் தெரி வித்துள்ளமை குறிப்பிடத்தக் கது. (நி-5)

# நெதன்யாகு...

# வீதியில்...

(ஜெருசலேம்) —

நீதிமன்றங்களின்...
பெஞ்சமின் நெதன...
மக்களை வீதியில்...

பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கோரிய நீதித்துறை மறுசீரமைப் புக்கான முதல் மசோதாவுக்கு இஸ் ரேல் பாராளுமன்றம் கடந்த திங்க ளன்று ஒப்புதல் அளித்தது. சில அரசாங்க முடிவுகளை நியாயமற்ற தாகக் கருதினால் அவற்றை ரத்து செய்ய உச்ச நீதிமன்றத்தின் அதிகார ங்களை இந்த மசோதா கட்டுப்படுத் தும் என்றே கூறப்படுகிறது.

இந்த நிலையில், கடந்த திங்கட்...

# ஆற்றில் மிதக்கும் சாமி சிலைகள்



(டில்லி)

இந்தியாவின் பல்நாடு மாவட்டம் அச்சம்பேட்டை அம்பதிப்புடி கிருஷ்ணா நதி க்கு அப்பகுதியைச் சேர்ந்த சிலர் கடந்த திங்கட்கிழமை சென்றிருந்த போது ஆற் றின் கரையோரம் பழங் கால சாமி கற்சிலைகள் இருப்பதை கண்டுள்ள னர்.

ஆற்றில் கிடைக்கப்பெற்ற விஷ்ணு , சிவலிங்கம் , மற்றும் இரண்டு நந்தி சிலைகள் என்பவற்றை எடுத்து சென்றுள்ளனர்.

அதேபோல, சீதா நக ரம் என்ற கிராமத்தில் கிருஷ்ணா நதிக்கரையில் நாக தேவதையின் கற்சிலை குவியல் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள் ளது.

குறித்த இடத்திற்கு சென்ற தொல் லியல் நிபுணர்கள் 50இற்கும் மேற்பட்ட நாக தேவதை சிலை களை இருப்பதை கண்டுபிடித் துள்ளனர்.

இவை, எந்த நூற்றாண்டை சேர்ந்தவை என்ற ஆய்வினை நடத்தி வருகின்றனர்.

ஆற்று வெள்ளத்தில் சாமி சிலை கள் அடித்து வரப்பட்டதா அல்லது மணலுக்குள் அடியில் இருந்த சாமி சிலைகள் மழை வெள்ளம் கார ணமாக மேலே வந்ததா என விசா ரணை நடத்தி வருகின்றனர்.

கிருஷ்ணா நதியில் ஆங்கா ங்கே சாமி சிலைகள் கிடைத்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள் ளது. (நி-5)

# செய்தி எழுதுவதற்கு புதிய தொழில்நுட்பம் அறிமுகம் செய்யும் கூகுள் நிறுவனம்

(லண்டன்)

நடப்பு நிகழ்வுகள் மற்றும் அது தொடர்பான தகவல் களை திரட்டி செய்தி கட்டு ரைகளாக உருவாக்கவென புதியவகை தொழிநுட்ப மொன்றை கூகுள் நிறு வனம் அறிமுகம் செய்து வைத்துள்ளது. இதனை ஜெனிசிஸ் என அழைக்கின்ற னர்.

அத்துடன், இது செயற்கை நுண்ணறிவு திறன் கொண்ட தொழில்நுட்பமாகும். செய்தி எழுதுவதில் செய்தியாளரு க்கு உதவுவதே இதன் பிர தான பணியாகும்.

தற்போது சிறிய அளவில் இயங்கி வரும் இந்த அம்சம், சில செய்தி நிறுவனங்களுடன் இணை ந்து சோதனை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

மேலும், வடிவமைப்பு கட்டத்தில் உள்ள நிலையில் இது குறித்த அதிகார பூர்வ தகவலை கூகுள் இன் னும் வெளியிடவில்லை. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ாகுவிடமிருந்து இஸ்ரேலை காப்பாற்றுங்கள்

# ...ல் இறங்கி மக்கள் போராட்டம்

(...ம்)

**...களின் அதிகாரத்தை குறைக்கும் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவின் திட்டமானது ஆயிரக்கணக்கான ...யில் இறங்கி போராட வைத்துள்ளது.**



...கிழமை இரவு ஆயிரக்கணக்கான மக்கள் ஜெருசலேம் மற்றும் டெல் அவிவ் வீதிகளில் இறங்கி ஆர்ப் பாட்டங்களில் ஈடுபட்டனர். இதனி டையே, சுமார் 95% மருத்துவர் களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக கூறும் இஸ்ரேலிய மருத்துவ சங்கம் 24 மணி நேர போராட்டத்தை முன்னெடுக்க இருப்பதாக கூறியது.

ஆனால், ஜெருசலேமில் மருத் துவ பராமரிப்பு மற்றும் நாடு முழு வதும் அவசர சிகிச்சைக ளுக்கு எந்த பாதிப்பும் ஏற் படாது என விளக்கமளித் துள்ளது. பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கோரிய சட்டத் திருத்தமானது இறுதி வாக் கெடுப்பில் 64-0 என வெற்றி பெற்றுள்ளது.

இந்த நிலையில், கடந்த திங்கட்கிழமை இரவு ஜெருச லேமில் உள்ள பாராளு மன்ற வளாகத்தை சுற்றியு ள்ள தெருக்களில் சுமார் 20,000 மக்கள் நீலம் மற் றும் வெள்ளைக் கொடிகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டுள்ளனர்.

உரிமைகளை விட்டுத்தர முடியாது எனவும் சர்வாதி காரிக்கு அடிபணிய முடியாது எனவும் நெதன்யாகுவிடம் இருந்து இஸ்ரேலை காப்பாற் றுங்கள் எனவும் மக்கள் முழக்கமிட்டனர்.

கூட்டத்தை கலைக்க பொலி ஸார் தண்ணீர் பீச்சியடி த்துள்ளதுடன், கண்ணீர் குண்டுகளையும் வீசினர். போராட்டத்தில் ஈடுபட்ட மக் களில் 19 பேர்கள் வரையில் கைதாகியுள்ளதாக தகவல் வெளியானது. (ஙி-5)

## நியூஸிலாந்தில் வசிக்கும் இலங்கை சிறுவனுக்கு கிடைத்த சர்வதேச விருது, குவியும் பாராட்டுக்கள்

(வெலிங்டன்)

நியூஸிலாந்தில் வசிக்கும் இல ங்கைச் சிறுவன் ஒருவன் சர்வதேச விருதொன்றை வென்றுள்ளார்.

14 வயதான கல்யா கந்தேகொட கமகே என்ற சிறுவனே இவ்வாறு மவுண்ட் பேட்டிங் என்னும் பதக்க த்தை வென்றுள்ளார்.

பொதுநலவாய நாடுகளில் நாடு ஒன்றில் ஓர் ஆண்டில் மேற்கொண்ட மிகச்சிறந்த உயிர்க்காப்பு வீரதீர செயலுக்கான விசேட அங்கீகாரம் இந்த சிறுவனுக்கு வழங்கப்பட்டுள் ளது.

மேலும், உலகில் இந்த வீரப் பதக்கத்தை வென்ற மிகவும் இளவயது சிறுவ னாக கல்யா கருதப்படுகின்றார்.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ஆம் திகதி படகு விளையாடில் ஈடுப்பட்ட போது அவரது 11 வயது சகோதரர் கடலில் அடித்துச் செல்லப்பட் டுள்ளார்.

இதன் போது சம்பவத்தை அறியாது கரைக்கு நீந்தி வந்த கல்யா, மீண்டும் மணி க்கு 60 மீற்றர் வேகத்தில் நீந்தி சென்று தனது சகோ தரனை மீட்டு தரைக்கு கொண்டு வந்துள்ளார்.

இந்நிலையில் இந்த வீர செயல் பெரும் அளவில் பாரா ட்டப்பட்டுள்ளது.

56 நாடுகளைக் கொண்ட பொதுநலவாய நாடுகள்அமைப் பின் கடந்த ஆண்டில் பதி வான மிகச்சிறந்த வீரச் செயலாக இந்த செயல் கருதப் படுகின்றது. தனது சகோ தரனை பாதுகாத்த கல்யா விற்கு அரச உயிர்காப்பு சங்கத்தின் மவுண்ட் பாட்டின் பதக்கம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஙி-5)



## பி.பி.சி ஊடகவியலாளராக பணியாற்றிய இலங்கைத் தமிழன் காலமானார்



(லண்டன்)

இலங்கையைப் பிறப்பிடமாக கொண்ட பி.பி.சியின் ஊடகவியலாளர் ஜோர்ஜ் அழகையா புற்றுநோயுடன் ஒன்பது வருடங்கள் போராடிய நிலை யில் காலமாகியுள்ளதாக அவரது குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.

கடந்த 20 வருடங்களாக பிபிசி யின் செய்திப்பிரிவின் தொகுப் பாளராக பணியாற்றினார்.

அதற்கு முன்னர் பி.பி.சி யின் விருதுகள் பெற்ற வெளி நாட்டு செய்தியாளராக அவர் பணியாற்றியிருந்தார். (ஙி-5)

## அவுஸ்திரேலிய கடற்கரையில் 51 திமிங்கிலங்கள் உயிரிழப்பு

(கன்பரா)

அவுஸ் திரேலியாவின் மேற்குப் பிராந்திய கடற்கரை யொன்றில் 51 திமிங்கிலங் கள் கரையொதுங்கி உயிரி ழந்துள்ளன என அதிகாரிகள் நேற்று தெரிவித்துள்ளனர்.

பேர்த் நகரிலிருந்து 400 கிலோமீற்றர் தொலைவி லுள்ள அல்பானி நகருக்கு அருகிலுள்ள செய்னேஸ் கடற்கரையில் பைலட் வேல் இனத்தைச் சேர்ந்த சுமார் 100 திமிங்கிலங்கள் நேற்று முன்தினம் மாலை காணப் பட்டது.

மேற்கு அவுஸ்திரேலிய மாநிலத்தின் பூங்கா மற்றும் வனஜீவராசிகள் துறை அதி காரிகள் இத்திமிங்கிலங் களை காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித் தனர். இரவிலும் இந்நடவடி க்கை நீடித்தது.

இந்நிலையில், நேற்று காலை 51 திமிங்கிலங்கள் உயிரிழந்துள்ளன என அதி காரிகள் உறுதிப்படுத்தியுள்ள னர்.

எஞ்சியுள்ள 46 திமிங் கிலங்களை காப்பாற்றுவதற் கான நடவடிக்கைகள் தற் போது முன்னெடுக்கப்படுகி ன்றன.

அவற்றை கடலின் ஆழான பகுதிக்கு அனுப்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ள னர். (ஙி-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முட்டைகளின் விலைகள் குறையும் சாத்தியம்

(கொழும்பு)

முட்டைகளுக்கான விலை 50 ரூபாவை விட குறையும் என உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முட்டைக்கான கட்டுப்பாட்டு விலை அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து விநியோகம் வீழ்ச்சியடைந்ததாக அகில இலங்கை கோழிப் பண்ணையாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.

மேலும் முட்டைக்கான அதிகபட்ச சில்லறை விலை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, விநியோகத்தில் முன்னேற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)


## தொழில் பயிற்சி மருந்தியலாளர்
## EXTERNAL PHARMACIST APPRENTICESHIP
## விண்ணப்பத்திற்கான அறிவுறுத்தல்

கல்வித் தகைமைகள் :

- GCE O/ L இல் ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தியுடன் மேலதிக ஐந்து பாடங்களில் சித்தி
- GCE A/L இல் இரசாயனவியல் பாடத்துடன் மேலதிக இரண்டு பாடங்களில் சித்தி
- வயது எல்லை இல்லை
- இரண்டு வருடங்கள் மருந்தியலாளர் தொழில்பயிற்சி காலத்தில் எந்தவொரு நிரந்தரமான பதவியையும் சம்பளத்துடனோ, அல்லது தொண்டராகவோ பொறுப்பேற்கமாட்டேன் என்று உறுதிப்படுத்தி சத்தியக் கடதாசியில் ஒப்பமிடவேண்டும்.

01.08.2023 ஆம் திகதியில் இருந்து www.SLMC.gov.lk இணையவழி மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொண்ட பின்னர் நேர்முகத்திற்குரிய (Interview) திகதி / நேரம் தெரிவு செய்த பின்னர், முக்கிய ஆவணங்களுடன் SriLanka Medical Council அலுவலகத்திற்கு சமூகமளிக்கவேண்டும்.

தொழிற்பயிற்சி மருந்தியளாளர்களுக்குரிய விண்ணப்பப்படிவங்களை Jaffna college (வெளிவாரி பட்டப்படிப்பு) 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் இம் மாதம் 27,28,29,30,31 ஆம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு நேரு sir 077 316 4251 க்கு தொடர்பு கொள்ளலாம். (16528)


# கடன் வழங்கும் நாடாக இலங்கை மாறும்
## வஜிர நம்பிக்கை

(கொழும்பு)



பாராளுமன்றத்தை மூடிவிட்டு நாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் மட்டும் ஒப்படைக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

இவ்வாறு பாராளுமன்றத்தை மூடினால் பாராளுமன்ற பராமரிப்புக்கு செல்லும் தொகையும், சம்பளமும் மிச்சமாகும் எனவும் அதன் பின்னர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே நாட்டை மீட்டெடுப்பார் எனவும் தெரிவித்திருந்தார்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் இலங்கை வங்குரோத்து நிலையிலிருந்து விடுபடும் எனவும் அதன் பின்னர் இலங்கை படிப்படியாக கடன் வாங்கும் நாடாக இல்லாமல் உலக நாடுகளுக்கு கடன் வழங்கும் நாடாக மாறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# லிந்துலையில் தீ விபத்து 10 வீடுகள் தீக்கிரை

(ஹற்றன்)

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லிந்துலை - இராணிவத்தை தோட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட தீவிபத்தால் 20 அறைகளை கொண்ட லயன் குடியிருப்பில் 10 வீடுகள் தீக்கிரையாகியுள்ளது.

மேலும், சில வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. இதனால் இந்த குடும்பங்களை சேர்ந்த 56 இற்கும் மேற்பட்டோர் நிர்க்கதியாகியுள்ளனர். (நி-5)






## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 450 | 450 | 450 | 400 |
| தக்காளி | 400 | 350 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 240 | 240 | 300 |
| கோவா | 250 | 200 | 300 | 300 |
| கரட் | 400 | 500 | 550 | 600 |
| பூசணி | 140 | 120 | 120 | 150 |
| புடோல் | 140 | 120 | 100 | 200 |
| வாழைக்காய் | 160 | 150 | 140 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 450 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 130 | 150 |
| பாகற்காய் | 350 | 400 | 300 | 400 |
| வெண்டக்காய் | 200 | 150 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 180 | 160 | 200 |
| பயற்றங்காய் | 200 | 220 | 180 | 200 |
| லீக்ஸ் | 250 | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 200 | 300 | 240 | 300 |
| கறிமிளகாய் | 300 | 350 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 250 | 300 |
| போஞ்சி | 500 | 450 | 480 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | -- | 220 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 70 | 80 |
| தேசிக்காய் | 200 | 150 | 150 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 60-70 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 350 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 240 | 300 |
| முள்ளங்கி | 80 | 120 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 50 | 35 | 50 | 60 |
| ஈரப்பலா | 160 | 150 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அனுமதியின்றி அமைக்கப்பட்ட கட்டடங்களுக்கு எதிராக ஆளுநர் நடவடிக்கை

(குருமன்காடு)

முறையான அனுமதி பெறப்படாது அரச காணியில் அமைக்கப்பட்ட வவுனியா வர்த்தக சங்க கட்டிடம் தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்குமாறு அரச அதிகாரிகளுக்கு வடக்கு மாகாண ஆளுநர் பீ.எஸ்.எம். சாள்ஸ் உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் வடமாகாண ஆளுநர் பீ.எஸ்.எம். சாள்ஸ் மற்றும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கு. திலீபனின் இணைத் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது வவுனியா நகரின் அபிவிருத்தி தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையால் திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன.

இதன்போது நகரில் ஏற்கனவே சட்ட விரோதமாக கட்டப்பட்ட கட்டடங்கள் தொடர்பாகவும் நகரில் உள்ள காணிகளை பாதுகாப்பது தொடர்பாகவும் எவ்வாறான நடவடிக்கையினை எடுப்பது என்று அபிவிருத்திக்குழு தலைவரால் கோரப்பட்டதுடன், வவுனியா வர்த்தக சங்கத்தால் அமைக்கப்பட்ட புதிய கட்டடம் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டதாகவும் குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டது.

வவுனியா நகரில் இவ்வாறு பல கட்டடங்கள் அனுமதியற்று கட்டப்படுவதாகவும் அதற்கான நடவடிக்கையினை எடுக்க வேண்டிய அதிகாரிகள் அமைதியாக இருப்பதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டது.

இவ்வாறான அனுமதியற்ற கட்டடங்கள் தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணித்த வடக்கு ஆளுநர், ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த கட்டடங்களின் பெறுமதிக்கமைய அவர்களிடமிருந்து குத்தகையினை அறவிட்டு குத்தகை அடிப்படையில் அதனை வழங்குவதற்கான நடவடிக்கையினை எடுக்குமாறும் அல்லது குறித்த காணிகளை மீள பெறுமாறும் தெரிவித்ததுடன், காணி விடயத்தில் அதிகாரிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.(4-5-250)

# கிளிநொச்சி சித்த மருந்தகத்தில் குரங்குத் தொல்லை அதிகரிப்பு

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி சித்த மத்திய மருந்தகத்தில் குரங்குத் தொல்லை காரணமாக மருத் துவ சேவை முன்னெடுப்பதில் பாரிய சிக்கல் நிலை காணப்படுவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

பகல் மற்றும் இரவு வேளைகளில் குரங்குகள் மருந்தகத்திற்குள் நுழைந்து மருந்தகத்தை சேதப்படுத்துவதால் பல மருந்துகள் பயன்படுத்த முடியாத நிலையில் வைத்தியசாலையில் காணப்படுவதாகவும் இதனால் வைத்திய தேவைக்காக செல்பவர்களுக்கு உரிய மருந்துகள் அங்கு கிடைப்பதில்லை எனவும் அவர் கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மருந்தக நிர்வாகத்தினர் வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் குரங்குத் தொல்லை தொடர்பிலும் வடமாகாண ஆளுநர் மற்றும் சம்பந்தப்பட்ட திணைக் களத்துக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை தற்பொழுது மருந்தகத்திற்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்வதனால் வைத்திய சாலைக்கு வழங்கும் மருந்துகளின் அளவுகளினை உடனடியாக அதிகரிக்க வேண்டும் என்பதுடன் குறித்த சித்த மருத்துவ நிலையத்தின் அடிப்படையான திருத்த வேலைகளை உடனடியாக மேற்கொண்டு மீண்டும் கிளிநொச்சி மாவட்டத்திற்கான சிறந்த மருத்துவ சேவையினை வழங்கும் நிலையமாக குறித்த மருந்தகத்தை மாற்றி அமைத்து தருமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5)

# முல்லை.கைவேலி மக்களின் உணவு தவிர்ப்பு கைவிடப்பட்டது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கைவேலி கிராமத்தில் காணிகளற்ற மக்கள் குறித்த பகுதியில் உள்ள 45 வீட்டுத்திட்டம் பகுதியில் காணிகளை துப்பரவு செய்து குடியிருந்த போது வனவள திணைக்களத்தினர் தம்மீது தாக்குதல் நடத்தியதாகவும் தம்மீது வழக்கு தொடர்வதாகவும் தெரிவித்து கடந்த 24 ஆம் திகதி நால்வர் தம்மை தமது காணியில் குடியேற்றுமாறும் கோரி உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் க.கனகேஸ்வரன் மற்றும் நில அளவை திணைக்களத்தினுடைய அதிகாரிகள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக காணிக் கிளை உத்தியோகத்தர்கள் வனவளத் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பலர் குறித்த இடத்திற்கு வருகை தந்து குறித்த காணிகளை பார்வையிட்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த மக்கள் குடியேறிய பகுதி வனவள திணைக்களத்தினுடைய பகுதிக்குள் இல்லை என நில அளவைத் திணைக்களத்தினர் உறுதிப்படுத்தியிருந்தனர்.

இதன் பின்னணியில் குறித்த பகுதியில் மக்களின் கோரிக்கைக்கு அமைய தற்காலிகமாக அவர்களுக்கு இருப்பதற்கு இடமில்லாத அடிப்படையில் அபிவிருத்தி பணிகளை செய்யாமல் ஏற்கனவே அமைத்த கொட்டில்களில் தற்காலிகமாக குடியிருக்குமாறும் இரண்டு கிழமைகளில் தாங்கள் நில அளவை திணைகளத்தினுடைய வேலைகளை முடித்து உரிய வகையிலே காணிகளை பகிர்ந்து அளிப்பதாகவும் அதன் பின்னர் அவர்களை உரிய இடங்களில் குடியேறுமாறும் முல்லைத் தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் தெரிவித்தார்.

இந்த உறுதிமொழிக்கு அமைவாக குறித்த போராட்டம் கைவிடப்பட்டது. (4-5)

# மக்கள் தொடர்பாடல் அலுவலகம் ஆளுநரால் திறந்து வைப்பு



(நெளுக்குளம்)

வடமாகாண ஆளுநரின் மக்கள் தொடர்பாடல் அலுவலகமானது ஆளுநரால் வவுனியா நகரசபை நூலக கட்டிடத்தில் நேற்று காலை திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளை சேர்ந்த மக்கள் ஆளுநரை சந்திப்பதற்கு நீண்ட தூரம் பயணித்து யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ள நிலையில் மக்களின் நலனை கருத்தில் கொண்டு அலுவலகமானது அமைக்கப்பட்டுள்ளமையுடன் வாரநாட்களில் மக்கள் தமது முறைப்பாடுகளை இவ் அலுவலகத்தில் தெரிவிக்க முடியும் என்பதுடன் மாதத்தில் இரு தடவைகள் ஆளுநர் இங்கு விஜயம் மேற்கொண்டு மக்களை சந்திப்பார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிரஞ்சன், உள்ளூராட்சி அதிகாரிகள், ஆளுநர் அலுவலக அதிகாரிகள், நகர சபை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (4-5-299)

# முல்லைத்தீவில் காடழிப்பில் ஈடுபட்ட இருவர் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேச செயலக ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத காடழிப்பில் ஈடுபட்ட இருவர் நட்டாங்கண்டப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றத்தடுப்பு பொலிஸார், மற்றும் நட்டாங்கண்டல் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து நடவடிக்கையில் இறங்கிய பொலிஸார், காடழிப்பில் ஈடுபட்ட இருவரை கைது செய்ததுடன் காடழிப்பிற்கு பயன்படுத்திய மரம் வெட்டும் இயந்திரங்களை பறிமுதல் செய்தனர்.

சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த 68 மற்றும் 38 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த நட்டாங்கண்டல் பொலிஸார், இருவர் மீதும் அரச காணியை அத்துமீறி பிடித்தல் மற்றும் பெறுமதிமிக்க மரங்களை வெட்டுதல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இதேவேளை இருவரையும் பிணையில் செல்ல அனுமதித்த பொலிஸார், குறித்த வழக்கை வரும் 8 ஆம் மாதம் 9 ஆம் திகதி மாங்குளம் நீதிவான் நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தனர். (4-5)

# ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வருடாந்த இருப்புக் கணக்கெடுப்பின் தொடர் நடவடிக்கைக்காக பாவனைக்குட்படுத்த முடியாத இலத்திரனியல் பொருட்கள், மரக்குற்றிகள், தகரங்கள், சீற், கதவுநிலை, மரக்கதவு, யன்னல்கள், கண்ணாடி யன்னல்கள் என்பன எதிர்வரும் 31 ஆம் திகதி ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது.

எனவே பொருட்களை பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் வந்து பார்வையிடலாம் என பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4-5)

# வவுனியாவில் வாள்வெட்டு இடம்பெற்ற வீட்டில் பொலிஸார் தீவிர சோதனை

(வவுனியா)

வவுனியாவில் வாள்வெட்டு மற்றும் தீ வைப்பு சம்பவம் இடம்பெற்ற வீட்டினை கொழும்பில் இருந்து வருகை தந்த பொலிஸாரின் இரசாயன பகுப்பாய்வாளர்கள் நேற்று சோதனை செய்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை வவுனியா, தோணிக்கல் பகுதியில் உள்ள வீடு ஒன்றிற்குள் நுழைந்த 10 பேர் கொண்ட குழு வாள்வெட்டு தாக்குதலில் ஈடுபட்டதுடன் வீட்டிற்கும் பெற்றோல் ஊற்றி தீ வைத்தனர்.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில், குறித்த வீடு எரியூட்டப்பட்டமை மற்றும் அங்கு எரிந்த பொருட்கள் தொடர்பில் இரசாயன பகுப்பாய்வை மேற்கொள்வதற்கு கொழும்பில் இருந்து விசேட பொலிஸார் வருகை தந்து சம்பவம் நடைபெற்ற இடத்தை பார்வையிட்டு இரசாயன பகுப்பாய்வு செய்துள்ளனர்.

இதேவேளை, குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் பல்வேறு தரப்புக்களிடமும் வாக்கு மூலம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-5-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

240





"அவ்னைப் பற்றி முதலில் எனக்குச் சந்தேகமாகக் கூட இருந்தது, அவனும் நம் எதிரிகளுடன் சேர்ந்து விட்டானோ என்று. அப்புறம் அந்தச் சந்தேகம் தெளிந்தது."

"பார்த்தாயா, புார்த்திபேந்திரா!" என்றான் கரிகாலன். "அவர் முழுவதும் சொல்லட்டும். அதற்குள் அவசரப்படுகிறீர்களே? ஐயா! வந்தியுத்தேவன் பேரில் தங்களுக்கு என்ன சந்தேகம் வந்தது?"

"சம்புவரையர் மாளிகையில் கூட்டம் நடந்த அன்று அவனும் அங்கிருந்தான் என்று அறிந்தேன். ஆனால் சதியில் அவனுக்குச் சம்பந்தமில்லையென்று பிறகு தெரிந்து கொண்டேன்."

"தாத்தா! இதெல்லாம் எப்படித் தங்களுக்குத் தெரிந்தது?" "கடம்பூர் மாளிகை விருந்துக்கு எனக்கு அழைப்பு வரவில்லை. அதிலேயே கொஞ்சம் சந்தேகம் உண்டாயிற்று. பிறகு, அங்கு வந்துவிட்டுத் திரும்பி ஊருக்குச் சென்ற குன்றத்தூர்க் கிழாரை வழியில் சிறைப்படுத்தி என் மலைக் கோட்டைச் சிறைக்குக் கொண்டு போனேன். அவரிடமிருந்து அங்கு நடந்தவைகளையெல்லாம் தெரிந்து கொண்டேன். வந்தியத்தேவன் சம்புவரையர் மகன் கந்தமாறனின் சிநேகிதனாம்.."

"ஆமாம் நம்முடைய சைன்யத்திலே இருவரும் இருந்தவர்கள் தானே? வடபெண்ணைக் கரையில் இருவரும் காவல் புரிந்தார்கள். அதிலிருந்து அவர்களுக்குச் சிநேகிதம் ஏற்பட்டிருந்தது எனக்குத் தெரியும்."

"எப்படியோ, வந்தியத்தேவன் அன்றைக்கு அம்மாளிகையில் இருந்தான். அவன் சதியில் சம்பந்தப்பட்டானா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள முடியாமலிருந்தது. பிறகு அதற்கு ஒரு வழி கிடைத்தது. தஞ்சைக் கோட்டைக்குள் கந்தமாறனுடைய முதுகில் வந்தியத்தேவன் குத்திவிட்டுத் தப்பித்துச் சென்று விட்டான் என்று தெரிந்ததும்"

"தாத்தா! இதை ஒரு நாளும் நான் நம்பமாட்டேன். வந்தியத்தேவன் வேறு எது செய்தாலும் செய்யாவிட்டாலும் ஒருவனுடைய முதுகில் குத்தக் கூடியவன் அல்ல. அதிலும் சிநேகிதனுடைய முதுகில் குத்தக் கூடிய சண்டாளன் அல்ல.."

"அந்தச் சிநேகிதன் தன் எஜமானுக்கு விரோதமான சதியில் ஈடுபட்டவன் என்று தெரிய வந்தால்? இவனையும் அந்தச் சதியில் சேர்ப்பதற்கு அந்தச் சிநேகிதன் ஒரு வேளை முயற்சி செய்திருந்தால்?.."

"எப்படியிருந்தாலும் முகத்துக்கு முகம் நின்று சண்டையிட்டிருப்பானே தவிர ஒரு நாளும் முதுகில் குத்தியிருக்க மாட்டான்!"

"உன் சிநேகிதனிடம் உன்னுடைய நம்பிக்கையை வியக்கிறேன், தம்பி! உண்மை எப்படியோ இருக்கட்டும். கந்தமாறனுடைய முதுகில் குத்தியதாக வந்தியத்தேவன் பேரில் பழுவேட்டரையர்கள் குற்றம் சுமத்தி அவனை வேட்டையாடி வருகிறார்கள். இவ்வளவுதான் எனக்குத் தெரியும். ஆகையால், வந்தியத்தேவனுக்கும் கந்தமாறனுக்கும் ஏதோ ஒரு விதத்தில் சண்டை வந்திருக்க வேண்டும். இதிலிருந்து அவன் உனக்கு எதிரான சதியில் சேர்ந்திருக்கவில்லை என்று நிச்சயமாகிறதல்லவா?"

"அதற்கு இவ்வளவு தூரம் சாட்சியம் வேண்டியதில்லை. வந்தியத்தேவன் நம் விரோதிகளுடன் சேர்வது என்றால், அப்போது இந்தப் பூமியே தலைகீழாகி விடும். அலை கடல் வறண்டு விடும். வானம் இடிந்து விழும். சூரியன் இராத்திரியில் உதிப்பான். சோழர் குலம் சர்வநாசத்தை அடையும்..." என்று ஆதித்த கரிகாலன் பரபரப்போடு கூறினான்.

"இளவரசர் சொல்லுவதை நானும் ஒத்துக் கொள்வேன். வந்தியத்தேவன் ஒருநாளும் நமக்குத் துரோகம் செய்து எதிரிகளுடன் சேர மாட்டான். அவனிடம் நான் சொல்லும் குற்றம் ஒன்றே ஒன்றுதான். அழகான பெண் முகத்தைக் கண்டால் வந்தியத்தேவன் தலை கிறுகிறுத்து விடுவான். அவனுடைய மதி மயங்கிவிடும்!"

இதைக் கேட்ட ஆதித்த கரிகாலன் புன்னகை புரிந்தான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## புத்தி பலம்



புத்தூர் என்ற ஊரில் இளங்கோ என்ற இளைஞன் ஒருவன் இருந்தான்.அவன் உடல் வலிமையே இல்லாதவன். ஆள் பார்ப்பதற்கு சுமாரான உடல் கட்டு கொண்டவனாக இருந்தாலும், அவனால் கடினமான வேலைகள் எதையும் செய்ய முடியாது. ஆனால், பிறரது பலத்தை தனக்குப் பயன்படுத்தி காரியம் சாதித்துக் கொள்வதில் அவனை மிஞ்ச யாராலும் முடியாது.

இளங்கோவுக்கு மூன்று நண்பர்கள் இருந்தனர். அவர்களும் இளங்கோவை போல் உடல் வலிமையற்றவர்கள் என்று நினைத்து விடக் கூடாது. அவர்கள் மிகவும் பலசாலி.

"தினமும் உடற் பயிற்சி செய்து உடலை பலப்படுத்தி என்ன பிரயோஜனம்? மூளையை பலப்படுத்துங்கள். அது தான் வாழ்க்கைக்கு உதவும்! " என்று சொல்லிச் சிரிப்பான்.அதற்கு அந்த மூவரும், "இளங்கோ! உடலை பலப்படுத்தினால் போதும், மூளை தானே பலப்பட்டு விடும். மூளை வலிமையை விட உடல் வலிமையால் உலகத்தில் நிறைய சாதிக்க முடியும்.

ஹூம் நோஞ்சான் பயலான உனக்கு உடலைப் பற்றி என்ன தெரியும்! " என்று சொல்லி சிரிப்பர். இப்படியாக அவர்கள் நல்ல நண்பர்களாகவே இருந்து கொண்டிருந்தனர். ஒரு நாள் இளங்கோ தனது மளிகைக் கடைக்குத் தேவையான சாமான்களை சந்தைக்குச் சென்று வாங்கி மூட்டை மூட்டையாகக் கட்டி சிறு வண்டியில் வைத்து மிகவும் சிரமத்துடன் இழுத்து வந்து கொண்டிருந்தான்.

வழியில் ஒரு பெரிய மேடு குறுக்கிட்டது. அவன் உடலில் பலம் இல்லாததால் அந்த மேட்டின் மேல் சரக்கு வண்டியை இழுக்க முடியாமல் மிகவும் திணறினான். யாராவது ஒருவர் உதவிக்கு வந்தால் வண்டியை எளிதாக மேட்டின் மேல் ஏற்றி விடலாம் என்று நினைத்த அவன், வண்டியை நிறுத்தி விட்டு யாராவது வருகிறார்களா என்று மேட்டின் மீது ஏறி நின்று பார்த்தான்.

அப்பொழுது எதிர் திசையில் இருந்து அவனது மூன்று பலசாலி நண்பர்கள் வ்ந்து கொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்த இளங்கோவுக்கு ஒரு யோசனை தோன்றியது. "விடுவிடு" வென்று கீழே இறங்கி, தன்னிடம் இருந்த கயிற்றின் ஒரு முனையை வண்டியில் கட்டினான். கயிற்றின் மறுமுனையைப் பிடித்துக் கொண்டு மறுபடியும் மேட்டிற்கு ஓடி வந்தான்.

அதற்குள் நண்பர்கள் அவனை நெருங்கி வந்து விட்டனர். உடனே இளங்கோ கயிற்றின் முனையைப் பிடித்தபடியே அவர்களை நெருங்கினான். எனதருமை நண்பர்களே! உங்களுக்கும்எனக்கும்ஒரு போட்டி! என்றான் இளங்கோ. "என்ன போட்டி நோஞ்சான்?" என்று கேட்டனர். "உங்களுக்கும், எனக்கும் கயிறு இழுக்கும் போட்டி. நீங்கள் மூன்று பேரும் இந்த முனையைப் பிடித்துக் கொண்டு இழுங்கள். நான் மறு முனையைப் பிடித்துக் கொண்டு இழுக்கிறேன். யார் ஜெயிக்கிறார்கள் என்று பார்ப் போம்! " என்றான் இளங்கோ.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரணில்லாதிருக்க முயற்சி செய். உண்மையாயிருக்க மட்டுமே உழைத்திடு.

– ஹோம்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பாடசாலைகளில் ஏற்படும் முரண்பாடுகள் சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டும்

தமிழ் மக்களின் பெரும் சொத்து கல்வி. கல்வியை மூலதனமாகக் கொண்ட நம் மக்கள் அறிவுப் புலத்தில் உயர்ந்து நின்றனர்.

அன்றைய எம் மாணவர்களின் கல்வி ஆற்றலை மழுங்கடிக்க சிங்கள ஆட்சியாளர்கள் தரப்படுத்தலைக் கொண்டு வந்தனர்.

இதன்மூலம் திறமையான நம் தமிழ் மாணவர்கள் பட்டப்படிப்பை மேற்கொள்கின்ற வாய்ப்பை இழந்தனர்.

தரப்படுத்தல் என்ற மிக மோசமான சூழ்ச்சியால் தமிழ் இனத்தை கந்தறுத்த பேரினவாதம் அனைத்து வழிகளிலும் தமிழ் மாணவர்களை கல்வியில் பின்னடையைச் செய்தது.

தமிழ் மாணவர்கள் கல்வியில் பின்னடைவைச் சந்தித்தபோது, திறமைக்கு முன்னுரிமை என்ற திட்டத்தினூடு சிங்கள மாணவர்கள் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு வகை செய்யப்பட்டது.

அன்று இதே திறமை அடிப்படை முறைமை தமிழ் மாணவர்களுக்குச் சாதகமாக இருந்த போது, தரப்படுத்தல் முறையைக் கொண்டு வந்த சிங்களப் பேரினவாதமானது, தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைப்பதாக நிலைமை மாறிய போது, அதனை வெட்டிச் சரிக்கும் பொருட்டு திறமை அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி முறையை அமுலாக்கியது.

இவ்வாறான பின்னணியில், நம் பிள்ளைகளின் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதான சூழ்ச்சிகள் நடக்கின்றனவோ என்று நினைவாக்கும் நிலைமையில் நம் பாடசாலைகள் சிலவற்றில் கடும் முரண்பாடுகள் தலைவிரித்தாடுகின்றன.

அதிலும் குறிப்பாக பாடசாலை அதிபர் நியமனங்களில் ஏற்பட்டிருக்கக்கூடிய முரண்பாடுகள் எமது கல்வி அபிவிருத்திக்கு மிகப் பெரும் குந்தகமாக அமையும்.

அதாவது முரண்பாட்டு நிலையில் பாடசாலைகளை இயக்குவதென்பது மிகக் கடினமான விடயம்.

உண்மையில் சமூகமும் பாடசாலையும் இணையும்போதுதான் மாணவர்களின் அடைவுமட்டம் உயர்வு பெறும்.

எனவே பாடசாலைகளில் முரண்பாடுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது அவசியம்.

அவ்வாறு முரண்பாடுகள் ஏற்பட்டாலும் அதனைச் சீரமைத்து அனைவரையும் ஒன்றுபடுத்தி அவர்களின் ஒத்துழைப்புகளையும் பெற்று பாடசாலையை வழிப்படுத்துவது கட்டாயமானதாகிறது.

இங்குதான் விட்டுக்கொடுத்தல், புரிந்துணர்தல் என்ற விடயங்கள் மேலோங்கி நிற்கின்றன.

இதைவிடுத்து கடும் போக்கில் யார் நடந்தாலும் அதன் பாதிப்பு சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அல்ல. அது மாறாக மாணவர்களுக்கும் மக்கள் சமூகத்துக்கும் எம் எதிர்காலச் சந்ததிக்குமாக இருக்கும்.

ஆகையால் முரண்பாடுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது, முரண்பாடு ஏற்படும் பட்சத்தில் விட்டுக்கொடுப்புடன் அதனை எதிர்கொண்டு வெற்றி கொள்வது என்றவாறு சவால்களைக் கையாள்வது அவசியமானதாகும்.

இல்லையேல் முரண்பாடுகளுடனும் கடும் விமர்சனங்களுடனும் பாடசாலை நிர்வாகம் மல்லுக்கட்ட வேண்டியிருக்கும்.

தவிர, அதற்காக அதிகளவு நேரத்தைச் செலவிடுகின்ற துர்ப்பாக்கிய நிலையும் மற்றவர்களின் அண்டல்கள் மற்றும் சுயநலங்கள் எனும் மாயவலைக்குள் சிக்க வேண்டிய பரிதாப நிலையும் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

ஆகையால் எதிலும் சுமுகமான நிலைமையை ஏற்படுத்துவதே புத்திசாலித்தனமாகும்.

# தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவை ரணிலின் யோசனைக்கு மோடி விருப்பம்

## விக்னேஸ்வரன் தெரிவிப்பு

தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கான விருப்பத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் தெரிவித்த நிலையில் அவரும் குறித்த திட்டத்திற்கு விருப்பம் தெரிவித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்த போதே ஜனாதிபதி ரணில் குறித்த விடயம் தொடர்பில் தெரிவித்ததாகத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவிக்கையில், தலைமன்னாரிலிருந்து இராமேஸ்வரம் சுமார் 18 கிலோமீற்றர் தூரமாக இருக்கும் நிலையில் விரைவாக இந்தியாவில் இருந்து தலைமன்னார் ஊடாக பொருட்களை கொண்டு வரக் கூடியதாக இருக்கும்.

காரைக்கால் கப்பல் சேவையை மாற்றி காரைக்கால் நாகப்பட்டினம் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கு இந்தியா விருப்பம் தெரிவித்துள்ளதாக மோடி தெரிவித்தார்.

இந்நிலையில் தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் சேவையை ஆரம்பித்தால் விரைவானதும் வினைத்திறனானதுமான சேவையை வழங்க முடியும் என மோடியிடம் பேசியுள்ளதாக ஜனாதிபதி ரணில் தெரிவித்ததாக விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பில் வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபையின் முதலமைச்சரின் செயலாளர் கலாநிதி கந்தையா விக்னேஸ்வரன் கலந்து கொண்டார். (ம-7)

## டெங்கு தொற்றால் இதுவரை 36 பேர் பலி

நாட்டில் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட 36 பேர் உயிரிழந்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு வாரங்களில் ஆயிரத்து 564 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எனினும், தற்போது நாளாந்தம் டெங்கு நோய் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த வாரங்களில், நாட்டின் பல பகுதிகளில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஒரு இலட்சத்துக்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் ஜூலை இலங்கை விஜயம்

(கொழும்பு)

ஜூலை மாதத்தில் இதுவரை ஒரு இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்ட சமீபத்திய தரவுகளின் படி, இந்த மாதத்தின் முதல் 23 நாட்களில் 104,664 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

மேலும் ஜூலை மாதத்தில், இந்தியாவில் இருந்து அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் வந்ததாக அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜூன் மாதத்தில் மொத்தம் 100,388 சுற்றுலாப் பயணிகள் வருகைத் தந்ததாக அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## சர்வகட்சி மாநாடு அர்த்தமற்ற விடயமாகும்

### அஜித் பீ பெரேரா எம்.பி

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் தந்திரமான ஆட்சியாளர்கள் கையாளும் ஒரு தந்திரமான உபாயமே இந்த சர்வகட்சி மாநாடாகும். இந்த சர்வகட்சி மாநாடானது ஒரு அர்த்தமற்ற விடயமாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி அஜித் பீ பெரேரா தெரிவித்தார்.

பண்டாரகமவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி அரசியல் கட்சிகள் உட்பட விடயத்துடன் தொடர்புடைய சகல தரப்பினருடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ள அழைப்புகளை விடுத்து வருகிறார். குழுக்களை அமைப்பதன் மூலம் பிரச்சினைகள் தவிர்க்கப்படுவது போன்று அந்த குழுக்களில் மிகவும் மோசமான பகுதி தான் இந்த பாகுபாடான குழுவாகும்.

13 ஆவது திருத்த விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்படும் கருத்துக்கள் போலியானவை. அதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அவரால் வழங்கப்படும் உறுதிமொழிகள் அர்த்தமற்றவை. பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கு முன்னதாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துங்கள். தேர்தலை பிற்போட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்காமல், நாட்டின் உண்மையான பொருளாதார, அரசியல் நெருக்கடிகளை மறைக்கும் போர்வையில் மேற்கொள்ளப்படும் உபாயமே இந்த சர்வகட்சி மாநாடாகும்.

தந்திரமான ஆட்சியாளர்கள் கையாளும் தந்திரமான உபாயமே இந்த சர்வகட்சி மாநாடாகும். இந்த சர்வகட்சி மாநாடானது ஒரு அர்த்தமற்ற தந்திர உபாயமாகும் என்றார். (ம-7)

## தொழிற்பயிற்சி கற்கைநெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது 2023 ஆம் ஆண்டு இரண்டாம் அரையாண்டிற்கான முழு நேர கற்கை நெறிகள் ஆரம்பமாகியுள்ளன.

கற்கைநெறிகளானது கைதடி, காரைநகர், வல்வெட்டித்துறை, பண்டத்தரிப்பு, சுன்னாகம் தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறுகின்றன.

மின்னிணைப்பாளர் (Electrician), கணிய அளவையியலாளர் (Quantity Survoyur) விடுதி விருந்தினர், வரவேற்பாளர் (Guest Relation Officer), வெதுப்பாளர் (Baker), நீர்க்குழாய் பொருத்துநர் (Plumber), முச்சக்கரவண்டி திருத்துனர் (Three Wheeler Technician) அலுமினியம் பொருத்துநர் (Aluminium Fabricator), கணனி வன்பொருள் திருத்துநர் (Computer Hardware Technician), அறை பராமரிப்பாளர் (Room Attendant), உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர் (Food & Berverage), குழந்தை பராமரிப்பாளர் (Childcare Giver) போன்ற கற்கை நெறிகளிற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இக்கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை மட்டம் - 4(NVQ-4) சான்றுதழுக்கான பயிற்சிநெறிகளாகும் கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர் வரும் 31.07.2023 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம் 4 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல 12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் அல்லது அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ள முடியும். மேலதிக விபரங்களினை பெற்றுக்கொள்வதற்கு 021 222 7949 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

**26**

**கலாநிதி க.தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



**கொங்கு - சிங்கம்வகை**

இவ்வகை நாணயம் படத்தில் காட்டப்பட்டுள்ளது. நாணயத்தின் முன்பக்கத்தில் சிங்கம் இடது புறத்தில் நின்று கொண்டு, இலங்கைக் கொடியில் இருப்பதுபோல, ஆனால் வாள் இல்லாமல், முன்வலது பாதத்தை உயர்த்திய ஒரு சிறிய செப்பு நாணயம் ஆகும். இதன் பின் பக்கத்தில் பகட்டான நாகரி எழுத்துக்கள் உள்ளன.

கொங்கு - சிங்கம்வகை



**ரணஸ் தாயபுராவின் சௌஹரான்கள் (கி.பி. 1275) வெளியிட்ட சிங்க உருவம் கொண்ட நாணயம்**

இவ்வகை நாணயம் படத்தில் காட்டப்பட்டுள்ளது. முன்பக்கம் சிங்கம் இடது புறமாக பார்த்தபடி உயர்த்தப்பட்ட வலது பாதத்துடன் நிற்கிறது. வால் வளைந்து உயர்ந்து நிற்கிறது. இச் சிங்கம் புள்ளியிடப்பட்ட வட்டத்திற்குள் நிற்கிறது. இந்த நாணயம் இலங்கையில் புழக்கத்தில் இருந்ததில்லை. இலங்கைக் கொடியில் உள்ள சிங்கத்துடன் வாள் தவிர குறிப்பிடத்தக்க ஒற்றுமை இருப்பதால் இது இந்தத் தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

ரணஸ்தாபபுராவின்சௌஹரான்கள் (கி.பி. 1275) வெளியிட்ட சிங்க உருவம் கொண்ட நாணயம்



**இரண்டாம் பாண்டியவம்சத்தின் நிலைக்குத்தாக மீன்உருவ வகை (கி.பி.740 - 909)**

இவ்வகை நாணயம் படத்தில் காட்டப்பட்டுள்ளது. இதில் ஒற்றை தட்டையான மீன் இடது புறம் நீந்துகிறது, தெளிவானகண், வாய் மற்றும் செவுள், மேல்நோக்கிய துடுப்புகள், முட்கரண்டி போன்ற வால் உள்ளன.மீனுக்கு மேலே இடது புறமாக ஒரு ஈட்டி சுட்டிக் காட்டுகிறது. கீழே சங்கிலியுடன் வேறு ஆயுதம். இவை அனைத்தும் புள்ளி வட்டத்திற்குள் உள்ளன.

மேலே சுட்டிக் காட்டி நிற்கும் சுத்தம் செய்யப்பட்ட மீன் கோயில் விளக்குகள், செங்கோல் ஆகிய. அனைத்தும் புள்ளி வட்டத்திற்குள் உள்ளன.


இரண்டாம் பாண்டியவம்சத்தின் நிலைக்குத்தாக மீன்உருவ வகை (கிபி: 740 – 909),



**இலங்கையில் பாண்டியர்களின் செல்வாக்கு காலத்தில் இருந்து கண்டு பிடிக்கப்பட்ட ஒரு ஒழுங்கற்ற செப்பு நாணயம்**

இலங்கையில் பாண்டியர்களின் செல்வாக்கு காலத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஒழுங்கற்ற செப்புநாணயம் ஆகும். இதன் முன்புறத்தில் அமர்ந்திருக்கும் காளை மற்றும் பின்புறத்தில் இரண்டு அல்லது மூன்று மீன்கள் உள்ளன. நாணயத்தின் முன்பக்கம் இருபுறமும் குத்து விளக்குகளுடன் வலதுபுறமாக அமர்ந்திருக்கும் காளை மேலேபிறை உள்ளது.பின் பக்கம் இரண்டு மீன்கள் கிடைமட்டமாக, இரண்டு விளக்குகளுக்கு இடையே மேல் இடது மற்றும் கீழ் வலதுபுறம். மேலே பிறை மற்றும் கீழே மூன்று இணை கோடுகளால் குறிக்கப்படுகிறது.

இலங்கையில்பாண்டியர்களின்செல்வாக்குகாலத்திலிருந்துகண்டுபிடிக்கப்பட்டஒருஒழுங்கற்ற செப்புநாணயம்



**இலங்கையில் புழக்கத்திலிருந்த சோழர் ஆட்சி மீன் உருவ வகை (கி.பி 920-1210)**

இது பாண்டியர்களின் செல்வாக்கின் பிற் பகுதியில் (824 - 943) இலங்கையில் சோழர்களால் அதிகமாக புழக்கத்தில் இருந்த ஒரு ஒழுங்கற்ற செப்பு நாணயம் ஆகும்.

இலங்கையில் புழக்கத்திலிருந்த சோழர்-ஆட்சிமீன்உருவ வகை (கி.பி 920-1210)



**இலங்கையில் புழக்கத்திலிருந்த தஞ்சாவூர் வெள்ளிக்காசு - உத்தம சோழர் (973 - 985)**

தமிழ் நாட்டின் தஞ்சாவூரின் ஆரம்பகால வெள்ளிக்காசு. இது கி.பி 990 இல் ராஜராஜசோழனால் (985-1014) இலங்கை மீது சோழர்படையெடுப்பிற்கு சற்று முன்பு வர்த்தக காலத்தில் பயன்படுத்தப்பட்டது. இந்த காசில் உள்ள “உட்கார்ந்தபுலி” வடிவமைப்பு தங்க ஃபனாம் நாணயத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதன் முன்பக்கம் புலி (சோழர் சின்னம்) அதன் வலதுபக்கம் இரண்டு நிமிர்ந்த மேல்நோக்கிய மீன்கள் (பாண்டியசின்னம்): வில் (சேர சின்னம்) மற்றும்: குடைஎன்பன உள்ளன. பின்பக்கம் நாகரி எழுத்தில் உத்தமசோழன் என எழுதப்பட்டுள்ளது.

இலங்கையில் புழக்கத்திலிருந்த தஞ்சாவூர்வெள்ளிகாசு உத்தம சோழர் ( 973 - 985)



**உத்தமசோழன் (கி.பி 973-985)**

உத்தமசோழன், கி.பி 973 முதல் கி.பி. 985 வரை சோழ நாட்டை ஆண்ட கண்டராதித்த சோழனின் மகனாவார். கண்டராதித்தர் இறந்த பின், இவருக்குப் பதிலாகக் கண்டராதித்தரின் தம்பி அரிஞ்சய சோழனின் மகன், இரண்டாம் பராந்தகன் என அழைக்கப்பட்ட சுந்தர சோழன் பதவிக்கு வந்தார். 16 ஆண்டுகள் ஆட்சி புரிந்த பராந்தகனின் இறப்புக்குப் பின் உத்தம சோழனுக்கு ஆட்சி கிட்டியது. இவர்13 ஆண்டுகள் சோழ நாட்டை ஆட்சிபுரிந்தார். இவர் மதுராந்தகன் என்று மற்றொரு பெயரிலும் அழைக்கப்பட்டார். இவரைத் தொடர்ந்தே புகழ் பெற்ற சோழ அரசன் இராசராச சோழன் அரியணை ஏறினார்.

இவர் அரசுக் கட்டில் ஏறுவதற்கு முன்பே காஞ்சிவரையுள்ள தொண்டை மண்டலம் சோழர் ஆட்சிக்குட்பட்டு விட்டது. இவர் பரகேசரி என்னும் பட்டம் பெற்றவர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரணமான...

இனந்தெரியாத சிலர், வீட்டை எரித்ததோடு, அங்கிருந்தவர்கள் மீது வாள் வெட்டு தாக்குதல் மேற்கொண்டதில் இளம் குடும்பப்பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், அவரது கணவரான சுகந்தன் எரிகாயங் களுடன் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவரும் நேற்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதேவேளை இச்சம்பவத்தில் காயமடைந்த மேலும் 8 பேர் வவுனியா வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-7,299)

## மூதாட்டியின்...

டைய தம்பையா சரோஜினி என்ற மூதாட்டி என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூதாட்டி கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,30)

மெகா பவர்
திகதி 26/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1535
G 15 44 45 49 65
54278

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3429
சீட்டிழுப்பு திகதி 2023.07.26
A 21 50 73 79
46831
தேசிய லொத்தர் சபை

Lucky 7 லக்கி
திகதி 26.07.2023
சீட்டிழுப்பு இலக்கம் 013
L7 இலக்கம் 3 9
வெற்றி இலக்கினம் மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 4 8 8 2 7 3

தன நிதானய
திகதி - 2023.07.26
சீட்டிழுப்பு இலக்கம் - 1217
K 10 45 54 72 K

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.07.26
சீட்டிழுப்பு இலக்கம் 496
மேஷம் 11 40 53 58 மேஷம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/07/26
சீட்டிழுப்பு இலக்கம் 5187
B 9 8 1 5 5 2
தேசிய லொத்தர் சபை

## சர்வ கட்சி...

தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு கிழக்குப் பிரச்சினை உடனடியாக எழவில்லை. பல தசாப்தங்களாக பல்வேறு அரசாங்கங்கள் இப்பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இருப்பினும் இப்பிரச்சினைக்கு இதுவரை எவராலும் நடைமுறை ரீதியான தீர்வை முன்வைக்க முடியவில்லை. இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் மிக முக்கியமான காரணி நல்லெண்ணத்துடன் செயற்படுவதே ஆகும்.

ஜனாதிபதியின் இந்த முயற்சியானது குறுகிய கால அரசியல் ஆதாயங்களைப் பெறுவதற்கான வேலைத்திட்டமேயன்றி உண்மையான விருப்பத்துடன் முன்வைக்கப்படும் நேர்மையான நடைமுறைப்படுத்தல் அல்ல என்பதை நாம் அவதானிக்கலாம்.

இதற்கு முன்னரும் தற்போதைய ஜனாதிபதிக்கு இப்பிரச்சினை தொடர்பில் தலையிட்டு தீர்வுகளை வழங்குவதற்கு பல சந்தர்ப்பங்கள் இருந்தமை இரகசியமல்ல.

அத்துடன் ஜனாதிபதி யாக பதவியேற்று ஒரு வருடமாகியும் இப்பிரச்சினைக்குத் தீர்வுகளை வழங் குவதற்கான நியாயமான அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய முயற்சிகளில் அவர் ஈடுபடவில்லை. கடந்த சுதந்திர தினத்திற்கு முன்னர் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண தன்னிடம் தீர்வு இருப்பதாக நாட்டுக்கு உணர்த்திய ஜனாதிபதி, குறுகிய கால அரசியல் இலாபங்களை பெற்றுக்கொள்ள இப்பொழுது முயற்சிக்கின்றமை மிகவும் தெளிவான உண்மையாகும். இவ்வாறான சூழலில் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு வழங்க முடியுமா என்பது சந்தேகமே.

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு பதிலளிக்குமாறு எதிர்க்கட்சியிடம் ஜனாதிபதி கேட்கின்றார். ஆனால் நடக்க வேண்டியது என்னவெனில் அரசாங்கம் ஒரு பிரேரணையை சமர்ப்பித்து அதற்கான பதிலை பெற்றுக்கொள்ள வேண்டுமேயன்றி அவ்வாறான பிரேரணை இல்லாத நிலையில் அதற்கு எவ்வாறு பதிலளிப்பது? இப்பிரச்சினைக்கு தீர்வு காண ஜனாதிபதிக்கு உண்மையான விருப்பம் இருந்தால், அவர் செய்ய வேண்டியது அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து தரப்பினருடனும் சேர்ந்து இணங்கிய பிரேரணையை சமர்ப்பிக்க வேண்டும். இது அரசின் கடமையும் பொறுப்பும் ஆகும்.

அவ்வாறான பிரேரணை இல்லாத நிலையில் அரசாங்கத்தின் நிலைப்பாடும் தெளிவில்லாமல் உள்ளது. அரசாங்கத்தின் முன்மொழிவுகள் மற்றும் நிலைப்பாட்டை அறிவிக்காமல் எதிர்க்கட்சியிடம் கருத்துக்களைக் கேட்பது அர்த்தமற்றது. அரசாங்கம் முன்மொழிந்த பின்னர் எதிர்க்கட்சி தனது பொறுப்புகளை நிறைவேற்ற தயாராக உள்ளது என்பதை வலியுறுத்துகிறோம்.

மேலும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான இன்றியமையாத அடிப்படை விடயம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை உறுப்பினர்களைக் கொண்ட மாகாண சபைகளை உடனடியாக ஜனநாயக ரீதியாக நிறுவுவது ஆகும். அதிகாரப் பரவலாக்கல் நடவடிக்கைக்காக ஜனநாயக ரீதியில் மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களையும் யோசனைகளையும் பெறுவது மிகவும் முக்கியமானதும் இன்றியமையாததுமாகும்.

தற்போது நான்கரை ஆண்டுகளாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு உறுப்பினர் கூட இல்லாது மாகாண சபையானது நிறைவேற்று அதிகாரத்தினால் வழிநடத்தப்பட்டு வருகின்றது.

இதனால் ஜனநாயகம் சீரழிந்து போயுள்ளதுடன் அதிகாரப்பகிர்வு தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு பிரதான தடையாகவும் இது மாறியுள்ளது. எனவே இப்பிரச்சினைக்குத் தீர்வு காணத் தேவையான கலந்துரையாடல்களை நடத்துவதற்கு ஏதுவாக ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட அனைத்து மாகாண சபைகளும் நிறுவப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம் என்றுள்ளது. (ம-7)

## என்ன...

நடைபெற்ற போது ரணில் தமிழரசுக் கட்சியினரைப் பார்த்து ஒரு நேரத்தில் 13 ஆவது திருத்தம் என்கிறீர்கள். 13 பிளஸ் என்கிறீர்கள். தேர்தல் என்கிறீர்கள். இவ்வாறு ஏன் குழப்பிக் கொண்டிருக்கிறீர்கள். தமிழ் மக்களுக்கு என்ன தேவை என்பதனை தெளிவாக முடிவெடுத்துக் கொண்டு வாருங்கள் என தமிழரசுக் கட்சியினருக்கு காட்டமாக கூறிவிட்டு சர்வ கட்சி கூட்டத்தை முடித்து வைத்தார். (ம-7)

## தேர்...

வேலை தேர்தல் முடிந்த பின்னர் இதைச் செயற்படுத்தலாம் தானே, இந்தியா அழுத்தம் தருகிறதா? என்றும் கேள்வியெழுப்பினர்.

தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் உள்ளதை புரிந்து கொண்டுள்ளதாகவும், ஆனால் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த உங்களுக்கு மக்களாணை அவசியம் எனவும் அத்துரலிய ரத்ன தேரர் குறிப்பிட்டார். (ம-7)

## பாதைப் பணியாளர் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் - ஊர்காவற்றுறை பாதையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பயணிகளைத் தாக்கிய வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பாதைப் பணியாளர் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று புதன் கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே மன்று அவருக்கு விளக்கமறியல் உத்தரவைப் பிறப்பித்தது.

## அரசு தமிழ்...

வதாகவும் தமிழ் மக்களை தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது என்றும் இதுவரை அரசாங்கம் வழங்கிய வாக்குறுதியினை நிறைவேற்றவில்லை எனவும் இரா. சம்பந்தன் தெரிவித்தார். (ம-7)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2161 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.07.26 தினம் புதன்கிழமை
01 28 31 48 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,476,972.40
"இரண்டாம் வரம்" 05 17 19 46 V
DLB

சனிதா
திகதி 2023.07.26 வெற்றி வாரம் 4322
30 46 52 54 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,294,404.00
"இரண்டாம் வரம்" 04 15 17 69 T
DLB

ராசி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு வாரம் 3873 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.07.26 தினம் புதன்கிழமை
04 36 54 55
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,528,748/-
"இரண்டாம் வரம்" 12 22 42 45
DLB

கப்ருக
திகதி 26.07.2023 வெற்றி வாரம் 1337
C 12 01 29 33 39
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 421,180,664.20
"இரண்டாம் வரம்" 23 31 49 52 B
DLB தொலை பேசி 011-2 333 546-47 Web: www.dlb.lk

ஜயோதா Jayoda
திகதி 2023.07.26 வெற்றி வாரம் 1942 வர்ணம் மஞ்சள்
03 21 27 39 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 45,080,723.20
"இரண்டாம் வரம்" 23 30 34 38 R
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 1987
வர்ணம் : ரோஸ்
சீட்டிழுப்பு திகதி : 2023.07.26
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,320,886/-
29 30 33 57 S
"இரண்டாம் வரம்" 06 28 65 74 B
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்

## ஹர்த்தாலுக்கு ஆதரவு

(யாழ்ப்பாணம்)

கொக்குத் தொடுவாய் மனித புதை குழியில் இறந்தோருக்கு நீதிகோரி நாளை வெள்ளிக்கிழமை காணமல் ஆக்கப்பட்டோர் உறவுகளால் வடக்கு, கிழக்கு ரீதியில் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஹர்த்தால் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிப்பதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

(ம-7)

# பாரதப் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்

இந்திய பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது.

மணிப்பூர் மாநிலத்தில் பழங்குடியினருக்கு இடையே நடந்த வன்முறை சம்பவங்கள் குறித்து பிரதமர் மோடி தனது கருத்தை தெரிவிக்கும்படி எதிர்க்கட்சிகள் இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தை முன்வைத்தன.

மோடி அரசுக்கு பெரும்பான்மை பலம் இருப்பதால் பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லா தீர்மானம் தோற்கடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மணிப்பூரில் கடந்த மே மாதம் முதல் பழங்குடியினருக்கு இடையே நடந்த மோதல்களில் 130க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பொலிஸ்...

ருடனும் கலந்துரையாடி தீர்மானம் எடுக்க வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய நல்லிணக்க வேலைத்திட்டம் மற்றும் வடக்கு-கிழக்கு அபிவிருத்தித் திட்டம் குறித்து பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக இந்த சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டது.

பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு, புதிய சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரம், தனக்கு மாத்திரமன்றி இதற்கு முன்னர் பதவியில் இருந்த நிறைவேற்று அதிகாரமுடைய ஏழு ஜனாதிபதிகளுக்கும் இருக்கவில்லை என்றும் புதிய சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கே இருப்பதாகவும் தெரிவித்தார்.

நாட்டிற்காக இந்த யோசனைகளை முன்வைப்பது மாத்திரமே தனது கடமை என்றும், இதனை பாராளுமன்றமே நிறைவேற்ற வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன், பாராளுமன்றத்தில் ஒரேயொரு வாக்கு மட்டும் வைத்துக்கொண்டு இதனை செய்ய முடியாது என்றும் இந்தப் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைவரும் கூட்டாக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஒன்பது மாகாண சபைகளில் ஏழு மாகாணசபைகள் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் அமைந்துள்ளன என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, எதிர்காலத்தில் மாகாண சபை முறைமையை தொடர்ந்து முன்னெடுக்க எதிர்பார்த்தால், ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள் தீர்க்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

முதல் பட்டியலில் உள்ள, மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டிய பல விடயங்கள் மத்திய அரச்ாங்கத்தின் கீழ் இருப்பதாகவும் எனவே அந்த அதிகாரங்களைப் போன்றே விவசாயம் மற்றும் சுற்றுலா போன்ற துறைகளில் கீழ் மட்ட செய்பாடுகளை முன்னெடுப்பதற்கான அதிகாரங்களும் மாகாண சபைகளுக்கு வழங்க வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டிற்கான கொள்கைகளை மத்திய அரசாங்கம் வகுக்க வேண்டுமெனவும், அனைத்து துறைகளிலும் அபிவிருத்தி நடவடிக்கைகளை உரிய முறையில் அமுல்படுத்துவதற்கு தேவையான வசதிகளை மாகாண சபை வழங்க வேண்டும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து கலந்துரையாடி தீர்மானம் எடுக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மாகாண சபை உறுப்பினர்கள் பதவியை வகித்துக் கொண்டு பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அந்தப் பதவியை 'வகித்தவாறே மாகாணசபை உறுப்பினராக செயற்படுவது தொடர்பில் முன்மொழியப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் கலந்துரையாடி முடிவு எடுக்க முடியும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ஈபிடிபி செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இ.தொ.க பொதுச் செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், சி.வி விக்னேஸ்வரன், சாகர காரியவசம், டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ச, கெவிது குமாரதுங்க, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, சரத் வீரசேகர, வண. அத்துரலியே ரதன தேரர், வீரசுமன வீரசிங்க, அநுர பிரிய தர்சன யாப்பா, லக்ஷ்மன் கிரியெல்ல உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் பிரதி நிதிகள் இதில் கலந்து கொண்டனர். (ம-7)

## ஜனாதிபதி...

யாளர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி எங்களை இரண்டில் ஒன்றை தெரிவு செய்யச் சொல்கிறார்.

ஒன்று மாகாண சபைத் தேர்தலை நடத்த இணங்க வேண்டும் அல்லது 13 வது திருத்தத்தில் உள்ள அதிகாரங்கள் குறித்து பேச வேண்டும் என்று கூறுகிறார்.

இரண்டையும் ஒரே நேரத்தில் மேற்கொள்ள முடியாது என்பது தான் அவரின் நிலைப்பாடாக இருக்கின்றது.

மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியுமாயின் அதன் அதிகாரங்கள் குறித்து ஏன் கலந்துரையாட முடியாது என்று எங்களுக்கு புரியவில்லை.

எனவே, குறித்த மாநாட்டை நிறுத்துவதற்கு நாங்கள் முடிவு செய்தோம். மாநாட்டின் ஊடாக எந்த பிரதிபலனும் கிடைக்கவில்லை.

நாங்கள் சந்தேகத்துடன் வந்தது போன்றே இங்கு இடம்பெற்றது.

தேர்தல் குறித்து கதைக்கும் போது ஜனாதிபதி அச்சத்துடனேயே இருப்பது எங்களுக்கு தெரியவந்தது.

நேற்றைய கலந்துரையாடல் முற்றிலும் அதிருப்தியாகவே அமைந்தது" என்று பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16375)

076 825 7716 (ஆகாஸ்)

**வேலைக்கு ஆட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல சைவ உணவகம் ஒன்றுக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- உணவு பரிமாறுபவர் (ஆண்/பெண்)
- யூஸ் தயாரிப்பவர் (ஆண்/பெண்)
- சிற்றுண்டி தயாரிப்பவர் (ஆண்/பெண்)
- தேநீர் தயாரிப்பவர் (ஆண்)
- துப்பரவு பணியாளர் (ஆண்/பெண்)

(16534)

076 166 1986

**VILLAGE HOTEL JAFFNA EXPRESS**

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/=

(16349)

T.P:077 544 8503

**விற்பனை உதவியாளர் தேவை (பெண்கள்)**

நல்லூரில் உள்ள குழந்தைகளுக்கான விற்பனை நிலையம் ஒன்றிற்கு விற்பனை உதவியாளர் பெண்கள் வேலைக்குத் தேவை.

Note : - யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் மற்றும் கணினி அறிவுள்ளவர்கள் விரும்பத்தத்தக்கது. (16534)

தொடர்பு :- 076 166 1986

**காணி விற்பனைக்கு**

யாழ் மாநகரசபை பகுதிக்குள் ஆறுகால் மடம் தில்லைவயல் 2 ஆம் ஒழுங்கையில் 75.3/4 காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
அராலி வீதியூடாகவும் பாதை உண்டு.
பரப்பு ரூபாய் - 15 இலட்சம் முதல் (16507)

077 352 5670
077 894 7293

**வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணம் சுழிபுரத்தை அண்மித்த பகுதியில் உள்ள உணவகத்திற்கு கொத்துரொஸ் வேலை, மேசை பராமரிப்பு மற்றும் சமையல் உதவியாளர் வேலைகளுக்கு ஆட்கள் தேவை.

076 779 7674

**விற்பனைக்கு**

China வில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்த brush less tube well சோளர் பம் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. (48V, 96V with mppt Control)

நந்தலாலா இரும்பகம்
இல. 29, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

077 780 5950
021 222 6234 (16537)

**VISA விண்ணப்பங்கள்**

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.




Srilankan Visa Extension
இலங்கை விசா நீட்டித்து தரப்படும்
(6969-C)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம்.
V2 TRAVELS

0777-068-777

**WORK IN CANADA**

**WORK PERMITS**

**COMPUTER TECHNICIANS**

COMPUTER சம்பந்தமான DEGREE ,DIPLOMA படித்தவர்களுக்கும் COMPUTER HARDWARE, NETWORKING துறைகளில் வேலை அனுபவம் உள்ளவர்களுக்கும் பொருத்தமான வேலை வாய்ப்புக்கள்

- ✓ 2 YEAR WORK PERMITS
- ✓ குடும்பத்தவர்களை உடன் அழைத்துச்செல்லும் வாய்ப்பு
- ✓ 2 வருடத்தின் பின் நிரந்தர வதிவிடஉரிமை (Permanent Resident)

(6969-C)

CIMS COLLEGE 0777 068 777

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் வசாவிளான் குட்டியபுலம் பாடசாலை அருகாமையில் 25 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- செம்மண், நன்னீருற்று
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பலாலி வீதியிலிருந்து 1km தூரம்
- நிலப்பரப்பு
- ஒரு பரப்பின் விலை ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் (550,000/=)
- நிலாவரை கிணற்றிலிருந்து 2Km தூரம்

(16536)

076 057 0354,076 826 0354


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org